
# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி





இறப்பை ஒரு சுமையாக
ஏன் பிறர் மேல்
ஏற்ற வேண்டும்?
நமக்குள் நாம் இறந்தால்
நாம் வாழ்வோம்;
நானிலமும் வாழும்.

கார்த்திகையில் நாமோர்
கடிவாளமிடுவோம்
மனது க்கு - மனமே!
மனிதத்தைப் போற்று
உனக்கு
மரணம் ஒரு சுமையல்ல.







நவம்பர் - 2006 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

நவம்பர் - 2006

மலர்-38 இதழ்-08



**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486


## உள்ளே


| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு.... - | 01 |
| நவம்பர் மாதம் - | 02 |
| அரசியல் அரசியல் அரசியல்... - | 03 |
| இலக்கிய மஞ்சரி - | 07 |
| புனித சின்னப்பர்.... - | 09 |
| அழகின் அலங்காரம் - | 11 |
| மறை அறிவை வளர்ப்போம் - | 14 |
| மருத்துவம், மருத்துவம்... - | 16 |
| தொண்டனின் சில நிமிடங்கள் - | 18 |
| மாணவர் பக்கம் - | 21 |
| வரலாற்றில் மட்டக்களப்பு... - | 22 |
| 10வது தென்னாசிய... - | 25 |
| விவிலியம் கற்போம் - | 27 |
| அறிவை வளர்ப்போம் - | 28 |



விலை : *15/=*

ஆண்டு சந்தா *: 250/=* ஆறுமாதச் சந்தா *: 130/=*

(தபாற்செலவு உட்பட)




## இறைவாக்கு

இறப்பின் தீர்ப்புக்கு அஞ்சாதே!
உனக்கு முன் இருந்தவர்களையும்
உனக்குப் பின் வரப்போகிறவர்களையும்எண்ணிப் பார்

சீராக் 41:3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

பிறப்பது இறப்பதற்கென்றால் உலகம் எதற்கு?
மனிதன் மரணத்துக்கென்றால்வாழ்க்கை எதற்கு?
பிறப்புரிமை எடுப்பதெல்லாம் மரணத்துக்கு
உயில் எழுத என்றால் வீடு எதற்கு, நாடு எதற்கு?
ஆம்,
ஒன்றில் மூன்றுருவம் இறைவன்- ஆனால்
முப்பிறப்பு கிறிஸ்தவனுக்கு. பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு.
பிறப்பது முடிவில்லா வாழ்விற்கு உழைப்பதற்கு-இது
கிறிஸ்தவம். இருந்தும்,
உருவாக முன் வயிற்றிலேயே
கொலைகள் எத்தனை!
கண் திறக்கமுன் விளைந்த சாவுகள் எத்தனை!
தொட்டிலில் ஆட்டமுன் பாடையில்
கிடைத்தவை எத்தனை!
கூவுகின்ற வயதில் ஒப்பாரி பாடியவை எத்தனை!
திருமண அழைப்புக்கு முன் மரணம்
அழைத்துக் கொண்டவை எத்தனை!
பெற்றெடுக்கமுன் பெட்டிக்குள் எத்தனை!
பெற்றெடுத்ததை சீராட்டமுன் மாண்டது எத்தனை!
வசந்த மாளிகை கட்ட எண்ணி வாய்க்கரிசியும்
பேரனை பார்க்கமுன்
மூச்சு நின்றதும் எத்தனை! எத்தனை!
இவற்றோடு,
துப்பாக்கியால் மரணம்
சைனட்டால் மரணம்
ஷெல் வீச்சால் மரணம்
போராட்டத்தால் மரணம்
இனவெறியால் மரணம்.
தற்காலத்தைச் சுருங்கச் சொன்னால்
வெடித்துச் சிதறுவதால் வெற்றுடம்பாகும் மனிதம்.
கேள்வி ஒன்று கேட்ப்போமா?
வாழ்வதற்காகப் பிறந்தோமா இல்லை
பிறந்ததற்காக வாழ்கிறோமா?
ஒரு மெய்யியலாளன் சொல்கின்றான்:

"நாமெல்லாம் இவ் உலகிலே தள்ளிவிடப் பட்டிருக்கின்றோம். ஏனென்றால் யாரும் எம்மிடம் விருப்பம் கேட்கவில்லை" இவன் விடை சரியென்றால் ஏதோ ஒரு சக்தி எம்மையெல்லாம் ஆட்கொள்கின்றது என்பது புரிகிறதா? அந்தச் சக்தி சித்தம் வைத்ததால்தான் நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றோம்.

தனது சாயலைப்போல் மனிதனையும் படைத்திருப்பதால் அந்தச் சக்தி **கடவுளே** அன்றி வேறு எதுவுமில்லை. ஆகவே மனிதன் பிறப்பிக்கப் படுவதெல்லாம் ஆண்டவனின் உன்னதம் மனிதனில் பிரதிபலிப்பதற்காகவே.

அடுத்து, எமது கிறிஸ்தவ விசுவாசத்தை நோக்குவோமெனில்

கிறிஸ்து உயிர்த்திராவிட்டால் கிறிஸ்தவம் உருவாகி இருக்காது; எமது விசுவாசமும் வீணே. எனவே இறந்தவன் உயிர்ப்பான் என்பதுதான் எமது கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கல்வி, போதனை. கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் சின்னமே உயிர்ப்புத் தான். ஆதலால் இறப்புக்குபின் உயிர்ப்பு இல்லை என்று நீங்கள் யாராவது சொன்னால் கிறிஸ்துவும் உயிர்க்கவில்லை என்பதுதான் பொருள். ஏனெனில் கிறிஸ்துவின் ஆவிதான் நம்மிலும் செயற்படுகிறது. ஆகவே நாமும் உயிர்ப்போம் என்பது புலனாகிறது.

கார்த்திகை மாதம் பிறந்தாலே கிறிஸ்தவர்களுக்கு இறந்தவர்களை நினைவுகூருகின்ற மாதமாகவே கருதப்படுகின்றது. அதுவும் கார்த்திகை 02ம்திகதி இதில் குறிப்பிட்ட நாளாக அனுஷ்டிக்கப் படுகின்றது.

என்ன செய்வது!

இறப்பு என்பது முடிவில்லா வாழ்வின் ஒரு கணம், ஆகவே முடிவில்லா வாழ்வைப் பெற இறக்கத் தான் வேண்டும்.

சுட்ட பொன் ஒளிரும், அடிபட்ட துணி வெண்மையாகும், அதுபோல் செத்த உடல் உயிர்க்கும் என்பது நமது விசுவாசம்.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது உயிர்பெறாது. ஆம், உயிர்பெற மடிய வேண்டும். அதற்காக எம்மை எல்லா வேளைகளிலும், எல்லாத் தருணங்களிலும் சொல்லாலும், செயலாலும் தயார்படுத்துவோம், விண்ணுலக பேரின்ப வாழ்வை சுவீகரித்துக்கொள்ள தினமும் போராடுவோம்.

மறுமடலிலும் இணைய ஆசைகளுடன்

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நவம்பர் (கார்த்திகை) மாதம் என்றால் உத்தரிக்கும் நம் சகோதரர்களின் எண்ணம் நமக்கு வருகிறது. உடனே அந்த ஆத்துமங்களுக்காக திருப்பலி நிறைவேற்ற அருட்பணியாளர்களிடம் பணம் செலுத்துகிறோம். இதை நினைக்கும்போது அழுவதா சிரிப்பதா என விளங்கவில்லை. ஏனெனில் மற்ற பதினொரு மாதங்களும் இந்த ஆன்மாக்கள் என்ன செய்தார்கள்? எங்கே போனார்கள்? சிந்திக்கின்றோமா? அதுதான் இல்லை.

ஆம், நாம் அந்த ஒரு மாதம் மட்டுமே இந்த ஆன்மாக்களை நினைக்கிறோம். அது மகா தவறு. அவர்களுக்காக எந்த வேளையிலும் நாம் மன்றாட வேண்டும். ஏழைகள் "பசிக்குது" என்று வந்தால் நம் ஒருவேளை உணவை ஒறுத்து அவர் களுக்குக் கொடுக்கத் தயங்கக் கூடாது. தாங்கள் மோட்சராட்சியம் நிச்சயம் சேர்வோம் என்ற ஒரேயொரு நம்பிக்கையில் இந்த ஆன்மாக்கள் உள்ளன. எம்மிலும் அவர்கள் உயர்ந்தவர்கள். நிச்சயம் மோட்சம் சேர்வார்கள். அது மட்டுமல்ல நமக்கு உதவி செய்யும் நிலையிலுள்ள புண்ணிய ஆத்துமாக்கள். இவ்வேளை எங்கோ வாசித்த ஒரு சிறுகதை எனக்கு ஞாபகம் வருகிறது. ஒரு பையன் இறந்துவிட்டான். அவனை யாரென்றும் அறியாத ஏழைப் பெண் ஒவ்வொரு நாளும் அவனுக்காக மன்றாடினாள். ஒருநாளுண்ண உணவு இல்லாமல் தவித்த அவளை ஒரு சிறுபையன் அழைத்துப் போய் ஒரு வீட்டின் வாசலில் விட்டு, அங்கு உணவு உண்ணும்படி கூறிப் போய்விட்டான். அவ்வீட்டுத் தலைவி அந்த ஏழைப்பெண்ணுக்குப் பசியாற உணவு கொடுத்தாள். அவள் அந்த வீட்டின் சுவரில் ஒரு பையனின் புகைப்படத்தை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அந்த வீட்டுத்தலைவியிடம் அந்தப் புகைப்படத்திலிருப்பவன் யார் எனக்கேட்டாள். அந்த வீட்டுத் தலைவி; 'இறந்து விட்ட என் அன்பு மகன்' என்று அழுதாள். ஏழைப்பெண் அதிர்ச்சியடைந்தாள். "அம்மா இந்தத் தம்பி உங்கள் மகனா? அவன் தான் என்னை அழைத்து வந்து இந்த வீட்டில் விட்டானா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! நீங்கள் அவன் இறந்துவிட்டான் என்கிறீர்கள் ஆனால் அவன்தான் என்னை அழைத்து வந்து இங்கு விட்டான். கூப்பிட்டுப் பாருங்கள், எங்காவது விளையாடிக் கொண்டிருப்பான் அம்மா" என்று கூறினாள். தாயோ மிகவும் மகிழ்ந்தாள். தன் மகன் இந்தப் பெண்ணை அழைத்து வந்ததால் அவன் யேசுவிடம் விரைவில் போய்ச்சேர்வான் என ஊகித்துக் கொண்டாள். ஆம் அவர்கள் இறை சித்தத்தின்படி இவ்வுலகிலோ வெவ்வேறு இடங்களிலோ இருக்கிறார்கள். எனவே நாம் அவர்களுக்காக எந்த வேளையிலும் மன்றாடலாம். வீட்டுவேலைகள் செய்யும்போதோ, பிரயாணம் செய்யும்போதோ, காலையோ, மதியமோ, மாலையிலோ செபிக்கலாம். குறிக்கப்பட்ட இடமோ, நேரமோ வேண்டியதில்லை. எங்கள் சிறிய செபங்கள் அவர்களுக்கு மீட்பும் ஆறுதலும் அளிக்கும் என்பதை மறவாதீர்கள். நாம் இன்று அவர்களுக்கு உதவினால் நிச்சயம் நமக்கும் மற்றவர்களால் இந்த உதவி கிடைக்கும்.

-றோஸ் யோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரையோடிப் போயுள்ள இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் காலத்திற்குக் காலம் தீர்வுத் திட்டங்கள் முன் வைக்கப்பட்டன. அவற்றுள் சில நடைமுறைப்படுத்தப்பட்டன, பல கைவிடப்பட்டன. ஆனால், இதுவரை இனப்பிரச்சினை சாத்தியமான வழியில் தீர்க்கப் படவில்லை. அந்த நிலையில், இனப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு ஒரே சாத்தியமான வழி 'சமஷ்டி ஆட்சிமுறையினை ஏற்படுத்துதல்' என்ற கருத்து இலங்கையின் உள்ளூர் மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் உரத்த குரலில் உரைக்கப்பட்டு வருகின்றன. 2001 இற்கும் 2004 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தமிழ்ப்பிரதி நிதிகளுக்கும் எல்.ரி.ரி.ஈ இனருக்கும் இடையில் சர்வதேச மட்டத்தில் மேற்கொண்ட பேச்சு வார்த்தையொன்றின்போது, சமஷ்டி முறைமையில் இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற இணக்கப்பாட்டினை எட்டினர்.






இவ்வாறான நிலையில் எமது கட்டுரைத் தலைப்பினை விளங்கிக் கொள்வதற்கு, சமஷ்டி முறையான தீர்வுத்திட்டத்தினை பல்வேறு கோணங்களில் பார்க்க வேண்டியுள்ளது. அந்தவகையில் பின்வரும் உப கூறுகள் மீது கவனம் செலுத்துவோம்.

- சமஷ்டி ஆட்சிமுறை என்றால் என்ன?
- இலங்கையில் சமஷ்டியாட்சி முறைக்குச் சாதகமான வாதங்கள்
- சமஷ்டி எதிர்நோக்கக் கூடிய சவால்கள்
- சவால்களைச் சமாளிப்பதற்கான வழிமுறைகள்

மேற்படியான தலைப்புகளின் கீழ், இச்சிறிய ஆய்வுக் கட்டுரையினை அணுகுவோம்.

***சமஷ்டி என்றால் என்ன?***

ஒரு மத்திய அரசின் கீழ் பல பிராந்திய அல்லது மாநில அரசுகள் இணைந்து, தமக்குரிய அதிகாரங்கள் - பொறுப்புகளைப் பங்கிட்டு வரையப்பட்ட நெகிழ்வற்ற அரசியல் யாப்பின் கீழ் நடாத்தப் படுகின்ற ஆட்சி முறையே சமஷ்டியாட்சி முறையாகும். "தேசிய ஒற்றுமை, அதிகாரத்தினை மாநில அரசுகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் இணைக்கும் ஆட்சிமுறையே சமஷ்டியாட்சி முறையாகும்" என பேராசிரியர் ஏ.வி. டைசி கூறியுள்ளார். அதாவது, தேசிய ஒற்றுமை, அதிகாரம் நிலைப்படுத்தப்படும் அதேவேளை, மாநில அரசுகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறான சமஷ்டி ஆட்சிமுறை, இலங்கையில் நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக நீடித்து வரும் இனப் பிரச்சினையத் தீர்ப்பதற்கும், நாட்டில் அமைதியை ஏற்படுத் தவும் உகந்தது என்பது உணரப் பட்டுள்ளது. அத்தகைய சமஷ்டி யாட்சி முறையினை ஏற்படுத்து வதிலுள்ள சாதக நிலைப்பாடுகள் எவை எனப் பார்ப்போம்.

***இலங்கையில் சமஷ்டியை ஏற்படுத்து வதிலுள்ள சாதகமான வாதங்கள்***

1) ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் - எல்.ரி.ரி.ஈ அமைப்பு ஆகியவை நோர்வே அனுசர ணையில் நடைபெற்ற பேச்சு வார்த் தையின் போது, சர்வதேச நாடொ ன்றில், சர்வதேச சமூகத்தின் பார்வை யில் சமஷ்டி முறையின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண் பதென ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2) முற்போக்கான அரசியல் தீர்வாக, உள்நாட்டிலும் - வெளி நாடுகளிலும் சமஷ்டி முறைமை பேசப்பட்டு வந்துள்ளது.

3) தற்போதைய ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத் தின் ஒற்றையாட்சி முறைத்தீர்வுக் கும் - எல்.ரி.ரி.ஈ இனரின் தனி நாட்டுக்கோரிக்கைக்கும் இடையில் அமைந்த, இரு சாராரும் தமது நிலையில் இருந்து இறங்கி வரக் கூடிய தீர்வாக சமஷ்டிமுறை அமைந்துள்ளது.

4) நாட்டைப்பிரிக்காமல் தீர்வு காணவும், வேற்றுமையில் ஒற்றுமை காணவும் சமஷ்டிமுறை சாத்தி யமானது.

5) யுத்தத்தினை நிறுத்தவும், அழிவுக்காக விரயமாக்கும் பணம், வளங்களை நாட்டின் அபிவிருத் திக்குப் பயன்படுத்தவும் சமஷ்டி வழி கோலத்தக்கது.

6) உலகில் பல்லின சமூக நாடுகள் சமஷ்டி ஆட்சி முறையினைப் பின்பற்றி கலாசார முரண்பாடுகள், பிரச்சினைகளைத் தீர்த்து அபி விருத்தி கண்டுள்ளன. சுவிச்சர்லாந்து, பெல்ஜியம், கனடா போன்ற நாடு களை உதாரணங்களாகக் கொள்ள முடியும்.

7) தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தவர்களின் சுயநிருணய உரிமையினை நிலைநாட்டு வதற்கும், அவர்கள் சுதந்திரமாகவும், சமத்து வமாகவும் வாழவும் வழிகோரலாம்.

8) ஆயுதமேந்திய நிலையிலுள்ள எல்.ரி.ரி.ஈ யினரை ஜனநாயக அரசியலுக்குள் கொண்டு வரு வதற்குச் சாத்தியமாக அமையும்.

9) மத்தியரசிடமுள்ள அதிகாரங்கள், பொறுப்புகளைப் பகிர்ந்து ஜன நாயகத் தன்மையை விரிவு படுத்த முடியும்.

10) வெளிநாட்டு முதலீடுகள், உல்லாசப் பயணத்துறை வளர்ச்சி, வெளிநாட்டு உதவிகளை அதிகரிக்க முடியும்.

11) சகல துறைகளிலும் நாட்டினை அபிவிருத்தி செய்வது சர்வதேச மட்டத்தில் கௌரவமான இடத்தி னைப் பெற்றுத்தரும்.

12) புலம் பெயர்ந்த எமது நாட்டுப் புத்திஜீவிகளையும், பொருளாதார வல்லுனர்களையும் இந்நாட்டுக்கு அழைத்து, அவர்களது சேவையை நாட்டுக்கு வழங்க முடியும்.

13) வடக்கு-கிழக்கு மாகாணங் களிலும், பிறநாடுகளிலும் அகதி களாக வாழும் மக்களைக் கௌர வமாக இந்நாட்டில் வாழச் செய்ய வாய்ப்புண்டு.

14) ஆயுத அடிப்படையிலும், இராணுவ அடிப்படையிலும் நாடு இரு பகுதிகளாக இராணுவக் கட்டுப்பாடுள்ள, கட்டுப்பாடற்ற பிரதேசங்கள் என்ற நிலைமை களைப் போக்கலாம், நாட்டினை ஜன நாயக ரீதியாக இணைக்க முடியும்.

15) இப்போதைய ஆளுங்கட்சியின் ஸ்தாபகர் S.W.R.D. பண்டார நாயக்கா இலங்கைக்கு சமஷ்டி யாட்சி முறையே பொருத்தமானது என 1930 இல் குறிப்பிட்டு இருந்தமை நோக்கத்தக்கது. மேலும், இலங் கையில் ஒற்றையாட்சி அபிவிருத்தி யையோ, ஐக்கியத்தையோ, ஒருமைப் பாட்டையோ உருவாக்க வில்லை, ஆயின் அவ்வாட்சி முறை நாட்டில் தோல்வியடைந்துள்ளது.

***சமஷ்டியை இலங்கையில் நிறுவுவதி லுள்ள தடங்கல்கள்***

1) இலங்கை சிங்கள - பௌத்தர்க ளுக்கே உரிய ஒரேயொரு சிறிய நாடு அதனைப்பிரிக்கக் கூடாது என்ற பேரினவாதிகளின் உரத்த சிந்தனை.

2) இலங்கையில் சமஷ்டிமுறை ஏற்பட்டால், அது இரண்டாகப் பிரிவதற்குரிய அத்திவாரமாகிவிடும் என்ற வியாக்கியானங்கள்.

3) வடக்கு - கிழக்கு இணைந்த பிராந்தியத்தின் எல்லைகளை நிருணயிப்பதிலும் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. இலங்கை யின் சுதந்திரத்தின் பின்னர், கிழக்கு மாகணத்தில் பல சிங்களக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை சிக்கலுக்கான காரணமாகவுள்ளது.

4) வளப்பகிர்வின் போது, இலங்கை மத்தியரசுக்கும் - வடக்கு - கிழக்குப் பிராந்திய அரசுக்கும் இடையில் சிக்கல் நிலை ஏற்படலாம். உ+ம்:- மகாவலி கங்கை நீர், திருமலைத் துறை முகம் போன்றவை.

5) வடக்கு - கிழக்குப் பிராந்தியத்திலுள்ள முஸ்லிங்களின் சார்பாக தென்கிழக்கு அலகுக் கோரிக்கையினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன் வைத்துள்ளது. இந்த நிலையில் மேலுமொரு பிரச்சினை உள்ளது.

6) வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள சிங்களவர் நிலை, இம்மாகாணங்களுக்கு வெளியிலுள்ள தமிழர்களின் நிலைப்பாடுகள் பற்றிய சிந்தனைகள், கேள்விகள்.

7) பேரினவாதக் கட்சிகள், கிழக்கிலுள்ள சில முஸ்லிம் கட்சிகள் வடக்குக் கிழக்கு இணைப்பு, சமஷ்டி ஆட்சி முறைக்கு எதிர்ப்புகளைக் காட்டி வரும் நிலைமைகள்.

8) இரு பிரதான கட்சிகளிடையே சமஷ்டி முறைத்தீர்வில் உடன் பாடு இல்லாத நிலை.

9) இலங்கையில் எப்படியான சமஷ்டியை ஏற்படுத்துவது என்பதிலுள்ள சிக்கல்கள்.

10) மேற்குலக நாடுகள் இலங்கை இனப்பிரச்சினையைத் தமது இலாபங்களுக்காகப் பயன்படுத்த நினைத்தல்.

11) ஆயுத வியாபாரிகள், ஆயுதத் தரகர்கள், யுத்தத்தினை அரசியலுக்காகப் பயன்படுத்துபவர்கள் யுத்தம் நிறுத்தப்படுவதை விரும்பாமை.

12) 25 வருடகாலத் தமிழர்களின் இழப்புகளுக்கு அரைகுறையான சமஷ்டிகள் தீர்வாக அமையாது என்ற சிந்தனைகள்.

### *தடங்கல்களை வெல்வதற்கான மார்க்கங்கள்.*

1) சர்வதேச சமூகம் இரு சாரார் மீதும் சாத்தியமான அழுத்தங்களைப்பிரயோகித்து, இரு சாராரையும் தமது உரத்த நிலையில் இருந்து இறங்க வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.
புலிகளை மாத்திரம் சர்வதேச அரசுகள் தடை செய்வது ஒரு தலைப்பட்சமான நிலைப்பாடாகும். எனவே அரசு மீதும் பொருளாதாரத் தடைகளைள விதிக்க வேண்டும்.

2) பேரினவாதிகளின் கடுமையான ஒற்றையாட்சிச் சிந்தனையை செயற்பாடுகளை முறியடிப்பதற்குச் சமஷ்டிச் சிந்தனையுள்ள முற்போக்குச் சக்திகள் இணைந்து பொதுவான வேலைத்திட்டங்களை முன்வைக்க வேண்டும், முன்னெடுக்கவேண்டும்.

3) புலிகள் தனி நாட்டுத் கோரிக்கையில் இருந்து விடுபடுவதற்கு ஏற்ற பொருத்தமான சமஷ்டி முறையை முன் வைக்கவேண்டும்.

4) சமாதானத்தினை விரும்பும் சர்வமத அமைப்புகள், சமூக வமைப்புகள் இணைந்து இனவாத செயற்பாடுகளை முறியடிக்க முயலவேண்டும்.

5) சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் பிரதி நிதிகள் தாம் சிறுபான்மை இனத்தவர்கள் என்ற அடிப்படையில், பரஸ்பரம் பேச்சு வார்த்தைகளை நடாத்தித் தம்மிடையேயுள்ள முரண்பாடுகளைக் களைந்து பொதுவான இணக்கப்பாட்டினை எட்ட வேண்டும்.

6) சிறுபான்மைச் சமூகப்பிரதிநிதிகள் அரசின் சலுகைக்காக விலை போகும் நிலையில் இருந்து விடுபட்டு, சிறுபான்மை மக்களின் உண்மையான உரிமைகளுக்காகக் கைகோர்க்க வேண்டும்.

7) விடுதலைப்புலிகள், முஸ்லிம் பிரதிநிதிகள் பரஸ்பரம் நம்பிக்கையினை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிரித்தாள நினைக்கும் பேரினவாத சக்திகளின் பிடியில் இருந்து முஸ்லிம்கள் விடுபட வேண்டும்.

8) சமஷ்டிக்கட்டமைப்பின் கீழ் வளப்பகிர்வினை மேற்கொள்வதற்காக அரச பிரதிநிதிகள், தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகளைக் கொண்ட புத்தி ஜீவிகளின் குழுக்களை அமைத்து இணக்கமான தீர்வைக்காண வேண்டும்.

9) நடுநிலையான சர்வதேச மத்தியஸ்தர்கள், இரு சாராரையும் பேச்சு வார்த்தையில் ஈடுபடுத்தி, நிலையான சமஷ்டிமுறைத் தீர்வுக்கு வழிகோலவேண்டும்.

10) தமது சுய இலாபத்திற்காகச் செயற்படக்கூடிய உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளை இனங்கண்டு அவற்றைத் தனிமைப் படுத்த வேண்டும். மேலும் கற்பனைவாத வரட்டுச்சிந்தனைகளைத் தவிர்த்து யதார்த்தமான முற்போக்கான சிந்தனைகளுக்காக வழி திறக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டின் அவலம், ஐக்கியமின்மை, அபிவிருத்தியின்மை, அபகீர்த்தி போன்றவற்றுக்குக் காரணமானதும், அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலைத்து நிற்பதுமான இனப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு மேற்குறிப்பிட்ட சிபார்சுகள் பின்பற்றப்படவேண்டும்.

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு” என்ற பாரதியின் பக்குவமான கருத்தினை இலங்கையில் அரசியல் தலைவர்கள் கவனத்திற் கொள்ளவில்லை. இதனால் ஏற்பட்ட அழிவு சிறுபான்மை மக்களை மட்டுமல்லாமல், பெரும்பான்மை இனத்தவர்களையும் பாதித்துள்ளமை கண்கூடு. உணர்ச்சிகளால் ஆளப்படுகின்ற அரசியல்வாதிகளால் இந்த நாட்டுக்கு எப்பயனும் கிடைக்கவில்லை. உணர்ச்சிகளை ஆண்டு உருப்படியான செயல்களை ஆற்றக் கூடிய தலைவர்களே இந்நாட்டுக்குத் தேவைப்படுகின்றது. அவர்களால் தான் இனப்பிரச்சினையினை நியாயமாகவும், நிலையாகவும் தீர்க்க முடியும். இல்லையேல், நாடு சுடுகாடாகவே மாறும் என்பது உண்மையாகும். வாழ்வோம், வாழவிடுவோம் என்பதை இந்நாட்டிலுள்ள சகல தரப்பினரும் மனதிற் கொள்ள வேண்டும். இல்லையேல், இந்நாட்டில் எவருமே நிம்மதியாக வாழ முடியாத நிலை மேலும் தொடர்கதையாகவே அமையும்.

சகல இனமக்களும் சமத்துவமாக வாழக்கூடிய சமஷ்டி முறைத் தீர்வினை அடைவதற்கு, சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாய அழைப்பாக உள்ளது. கை நீட்டிக் கடன்பட்டுச் சண்டை செய்கின்ற யுத்த கலாசாரம் புத்தி ஜீவிகளின் செயலாக அமையாது. இதனை ஒவ்வொரு பிரஜையும் உணர்ந்தாக வேண்டும்.

-அனுசாகரன்

# தீமையை அன்பினால் வெல்லுங்கள்!

## இந்து சமய சகோதரர்களுக்கு திருச்சபையின் தீபாவளி வாழ்த்து!

தீபாவளித் திருவிழா பொய்மையின் மீது உண்மையும், இருளின் மீது ஒளியும், தீமையின் மீது நன்மையும், மரணத்தின் மீது வாழ்வும் கொண்ட வெற்றி விழா என்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்வுடனும் நன்மைத் தனத்துடனும், ஒளியுடனும், உண்மையுடனும் நெருங்கிய தொடர்புடையதாய் அன்பு எனும் அணிகலன் விளங்குகிறது. இந்த அன்பினூடாக எல்லா மதங்களும் இன்றைய உலகில் மலிந்துவிட்ட மனித வெறுப்பு, சந்தேகம் எனும் தீமையை முறியடிக்க அழைக்கப்பட்டுள்ளன.

கிறீஸ்தவ விசுவாசம் கடவுளை அன்பு வடிவானவராகக் காண்கிறது. அன்பின் ஊற்றும் அன்பின் நிறைவும் இறைவனேயாவர். நாம் மற்றவர் மீது கொள்ள வேண்டிய அன்பு இறை உறவினால் இன்னும் அர்த்தம் பெறுகிறது. நம்மை அன்பு செய்யும் கடவுளுக்கு நாம் அளிக்கின்ற பதில் அவர் படைத்த மனிதர்களையும் ஏனைய உயிரினங்களையும், அன்புகாட்டிப் பாதுகாத்துப் பராமரிப்பதுதான். ஆகவே ஒடுக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் உட்பட அனைத்து மக்களுக்காகவும் அவர்களது முன்னேற்றத்துக்காகவும், அனைவருக்கும் நீதி கிடைக்கவும் நாம் கைகோர்த்துச் செயற் படவேண்டும்.





மனித உள்ளத்தில் வளரும் ஆன்மீக நெறிக்கு எதிரான துர்க்குணங்களை முழுமையான அன்பினாலும் இன்முகத்தினாலும் வெற்றி கொள்ளலாம். அன்பு ஒரு விளக்கு. இருளடைந்துள்ள உலகுக்கு ஒளியூட்டவும் நாம் வாழ்வதற்கும் செயற்படுவதற்கும் வேண்டிய சக்தியைக் கொடுக்கவும் வல்லது!

இந்துக்களுக்குத் தீபாவளி தீபவழிபாடாக நிற்கின்றது. நமது அன்பு இறுதியில் இவ்வுலகில் வெறுப்பெனும் இருளை வெற்றி கொள்வதாக!

இவ்வாறு தீபாவளிச் செய்தியில் தெரிவித்துள்ள திருச்சபையின் பல்சமய உரையாடல்களுக்கான திருப்பீடம் இந்து சமய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

**ஆழியோன்**

எஸ். சி. இரத்தினசிங்கம் (இந்துமதி) அவர்களால் எழுதப்பட்டு யாழ். ராதவல்லி வெளியீடாக வந்துள்ள 'முட்புதரில் பூத்த புதுமலர்' என்னும் சிறுகதைகளின் தொகுதி எம் கைக்குக் கிடைத்தது. எட்டுச் சிறுகதைகளைக் கொண்ட புத்தகம் இது. இவ்வெட்டுச்சிறுகதைகளும் 'மன்றாடல்' என்னும் சஞ்சிகையில் ஏற்கனவே பிரசுரமாகியவை.

இச்சிறுகதைகள் அனைத்தும் விவிலியம் சார்ந்த உண்மைகளை வாசகர்கட்கு எடுத்துச் சொல்ல முயற்சிக்கின்றன. ஆனால் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இவற்றைச் சிறுகதைகள் என்று சொல்வதைவிட 'சிறுவர் கதைகள்' என்று சொல்வதே சிறப்பு போல் தோன்றுகிறது.

'ஜெபவல்லமை' என்ற சிறுகதையை எடுத்துப் பார்த்தால், அது' ஓறல்றொபேட்' என்பவரின் வாழ்க்கைச் சம்பவம். அதை ஆசிரியர் அழகாக எடுத்துக்காட்ட முயன்றுள்ளார். ஆனால் அச்சிறு கதையானது ஒரு விவரணச்சித்திரம் போல் தான் அமைந்துள்ளது, என்றாலும் 'ஓறல் றொபேட்டின்' சுவிஷேச ஊழியத்தை வாசகர்கட்கு எடுத்து விளக்குவதில் ஆசிரியர் வெற்றியடைந்துள்ளார்.

அடுத்ததாக, 'யார் பாவி' என்ற கதையைப் பார்ப்போம். 'பாவி என்று எவரையும் நாம் தீர்ப்பிட முடியாது, கடவுள் தான் தீர்ப்பிடலாம்' என்றவாறு கதை செல்கின்றது. 1971ம் ஆண்டில் 5ம் வகுப்பு'தமிழ் மலர்' என்னும் பாடப்புத்தகத்தில் 'யார் அந்தப் பாவி' என்ற கதையொன்று உள்ளது. பஸ் வண்டியில் பயணிகள் செல்லும் போது கடுமையான இடி மின்னலுடன் மழை பெய்கின்றது. வண்டியினுள் யாரோ ஒரு பாவியுள்ளான், எனவேதான் இப்படி இடி வருகின்றது. ஒவ்வொருவராக இறங்கி சற்று தொலைவில் உள்ள ஆலமரத்தை, தொட்டு விட்டு வரவேண்டும். பாவி தொடும்போது அவன் மீது இடி வரும்' என்று பயணிகள் தீர்மானித்து ஒவ்வொருவராக மரத்தைத் தொட்டுவிட்டு வருகின்றார்கள். ஆனால் ஒருவன் மட்டும் அவ்வாறு செய்யமறுக்கவே, பிரயாணிகள் அவனைப் பலவந்தமாக இறக்கியனுப்புகின்றார்கள். அவன் மரத்தைச் சென்று தொடுகின்றான். அவ்வேளையில் இடியொன்று விழுந்து பஸ் எரிகின்றது. அவனைத்தவிர அனைவரும் இறக்கின்றனர். 'அந்தப் பாவி யார்' ? என்ற வினாவுடன் கதை முடிவடைகின்றது. அதே கதையை யாத்திரிகர் கூட்டமொன்று நடந்து செல்லுகையில் நடப்பதாக ஆசிரியர் மாற்றியுள்ளார் போல் தோன்றுகின்றது.

'சளைக்காத ஜெப வீரர்' என்னும் கதையில் 'ஜோர்ஜ் முலர்' என்ற ஜெபவல்லமை மிக்க மனிதரைப்பற்றி கதாசிரியர் சொல்கின்றார். பல்லாயிரக்கணக்கான அவரின் வீண்ணப்பங்களுக்கு கடவுள் பதில் அளித்துள்ளபோதும் ஒரேயொரு விண்ணப்பம் நிறைவேற அவர் 52 1/2 வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. அவரின் மரணத்தறுவாயில் அவ்விண்ணப்பமும் நிறைவேறியது. இதுவும் ஒரு விவரணச் சித்திரம் தான்.

'விசுவாசக்கப்பல்' என்னும் சிறுகதை நாம் இறைவனிடம் கொள்ளவேண்டிய ஆழமான விசுவாசம் பற்றிச் சொல்கின்றது. தாழப்போகும் நிலையில் உள்ள கப்பலின் தலைமை மாலுமியின் பிள்ளைகள் சொல்லுகின்றார்கள், எங்கள் அப்பா தான் கப்பல் தலைவன்... அவர் எங்களை மட்டுமல்ல, கப்பலில் உள்ள எல்லோரையும் காப்பாற்றுவார்..'

இதே போல்தான் இயேசுவும் எம்மைக் காப்பாற்றுவார் என்று கதாசிரியர் சிறப்பாக வலியுறுத்த விழைகின்றார்.

அடுத்ததாக 'கல்லறைப்பூக்கள்' என்னும் கதையைப் பார்ப்போம். 14 வயது மகளை இழந்த தாய் ஒருத்தியின் சோகத்தையும் பின் அவளின் மாற்றத்தையும் இக்கதை எடுத்துச் சொல்லுகின்றது. அனாதைப் பிள்ளைகளின் முகத்தில் அத்தாய் தனது மகள் மேரியைக் கண்டு திருப்தி அடைகின்றாள், ஆனால் இக் கதையில் ஒரு வசனம் மனதில் சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. '...இதனால் மேரி அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்குச் சென்று, மேரி அதிகம் நேசித்த மலர்களைக்கொண்டு சென்று அவள் கல்லறையில் அழகாகப்பரப்பிவைத்து... கண்ணீரால் நிரப்பிச் செல்வது வழக்கம். இக் காட்சிகளை அந்தச் சவச்சாலைக் காவலன் மட்டும் பார்த்து ரசிப்பான்....' என்றவாறு அச் சிறுகதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனங்கள் செல்கின்றன. ஒரு தாயின் வேதனையயை எவனாவது ரசிப்பானா? ஒரு வேளை அவதானிப்பான் என்று சொல்லியிருந்தால் ஏற்றுக் கொள்ளலாம்.. ஏன் இந்தக் காவலன் ரசித்தான் என்று தான் விளங்கவில்லை .

'முட்புதரில் பூத்த புது மலர்' என்ற கதையின் மூலம் பாவங்களை வாயால் அறிக்கையிட்டு ஆண்டவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கதாசிரியர் வலியுறுத்துகின்றார்.

'மாசில்லாத அன்பு' என்ற சிறுகதையின் மூலம் இறைவனின் அன்பு ஒன்றே மாசில்லா அன்பு என்று கதையின் ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். திருவாளர் சோமசுந்திரம் அவர்களின் கதையின் மூலம் இது வெளிப்படுத்தப்படுகின்றது.

எட்டாவது கதையான 'ஊழியம்' இறை ஊழியம் பற்றி எடுத்தியம்புகின்றது. இரண்டு கால்களையும் இழந்த அனாதைச் சிறுவன் ஒருவன் எப்படித் தேவ ஊழியக்காரனாக மாறினான் என்பதை இக்கதை சித்தரிக்கின்றது.

அனைத்துச் சிறுகதைகளும் அழகிய சித்திரங்களின் மூலம் மெருகுபடுத்தப்பட்டுள்ளன. நாற்பது பக்கங்கள் கொண்ட இத்தொகுதியின் விலை ரூபா 50 ஆகும். 'சுரபி' பதிப்பகம் அழகாக புத்தகத்தை வெளியிட்டுள்ளது. நாற்பத்தேழு பக்கங்களுக்கு மேற்பட்ட வெளியீடுகள் தான் புத்தகம் என்று கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. அட்டைப்படம் அற்புதம்!

# இன்றும் பல இயேசுக்கள்



பாரிலே பாடுபட்ட
பரமன் இயேசுவின்
பாதங்கள் பட்ட பூமி
பாலை நிலங்களாய் இன்று

மனித உயிர்களுக்காய்
மரணித்த மாசில்லா
மாமைந்தன் கன்னிமரி
மடியினிலே அன்று

மனித உரிமைகளுக்காய்
மரணிக்கும் மாசில்லா
மைந்தர்கள் பலர்தம்
அன்னையர் மடிகளிலே

எங்களில் பல இயேசுக்கள்
மடிந்து கொண்டிருக்கின்றார்கள் - இன்று
எங்களில் பல வியாகுல மரிகள்
அழுது கொண்டிருக்கிறார்கள்

ஏரோதுக்களும் பிலாத்துக்களும்
யூதாசுக்களும் நமக்குள்
வேரோடி இருக்கையில்
விளைவது மரணந்தானே!

தந்தையின் அன்பும்
தாய் மரியின் உதவியும்
உள்ளவரை எம்மில்பல
இயேசுக்கள் உயிர்த்திடுவார்

—தேனகத்துத் தேனீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"தோன்றிற் புகழோடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற பொய்யாமொழிப் புலவர்
வள்ளுவரின் வாக்கினை மெய்யாக்கிய செயல் வீரர்
புனித சின்னப்பராவார்.

சிலர் புகழோடு பிறக்கின்றார்கள்.
சிலர் புகழைத் தேடிக்கொள்கின்றார்கள்.
சிலர்மேல் புகழ் திணிக்கப்படுகின்றது.

புகழ்பெற்ற மறைபரப்பாளர் புனித சின்னப்பர் தனக்கெனப் புகழைத் தேடவில்லை. அவர் தன்னை அழைத்த இறைவனுக்குப் புகழ் தேடினார். இறை அரசைக் கட்டியெழுப்புவதில் முனைந்து நின்றார். அதனால் அவரைப் புகழ் பெற்றவர் வரிசையில் வைத்துப் போற்றுகின்றோம்.

யூதப் பரம்பரையிலே பென்ஜமின் கோத்திரத்திலே உதித்த சவுல் என அழைக்கப்படும் புனித சின்னப்பர் தார்சு நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உயர் குடும்பத்தில் பிறந்ததால் பேரறிஞர் கமாலியேலிடம் கல்வி கற்க அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. தனது ஆசிரியரைப் போன்றே புனித சின்னப்பரும் கல்வியில் சிறந்து விளங்கியதால் அனைவரது நன்மதிப்பையும் பெற்றார்.

புனித சின்னப்பர் இளைஞராக இருந்த போதே கிறிஸ்தவ நெறியைப் பின்பற்றியவர்களை அழிப்பதில் மிக உக்கிரமாகச் செயல்பட்டார். கிறிஸ்தவர்களை அழிப்பதில் அவர் எவ்வளவு மும்முரமாக ஈடுபட்டாரோ அதை விடத் தீவிரமாக அவரைப் புதிய மனிதனாக மாற்றுவதில் இறை ஆவியும் செயல்பட்டது. ஆம் - கிறிஸ்தவர்களை உருவாக்குவதற்கு ஏற்றதொரு பணியாளனை, நற்செய்தியை அறிவிக்கக் கூடிய சிறந்ததொரு மறை பரப்பாளனை இறைவன் சவுல் என்ற தீவிரவாத இளைஞனில் கண்டார். சவுல் தமஸ்கு நகர் சென்ற வேளையில் வழியில் நடைபெற்ற சம்பவத்தில் அவரிலே இந்த மாற்றம் ஏற்பட்டது. தமஸ்கு அனுபவந்தான் தனது வாழ்க்கையிலே முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை புனித சின்னப்பர் மறுக்கவில்லை, மறைக்கவில்லை, மறக்கவும் இல்லை.

தமஸ்கு அனுபவத்தின் மூலம் தனது அழைப்பை, பணியை அறிந்து கொண்ட புனித சின்னப்பர் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதைத் தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு, நற்செய்தி அறிவிப்புப் பணிக்குத் தம்மை முற்றாக, முழுமையாக அர்ப்பணித்தார். யூத மதத்திலே ஊற்றெடுத்த கிறிஸ்தவ போதனையை, விசுவாசத்தை, கிரேக்க, புறவின உலகுக்கு எடுத்துச் செல்வதே அவரது பணியாக அமைந்தது. "உலகின் இறுதி எல்லைவரை சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற கிறிஸ்துவின் ஆணையைத் தலைமேற் கொண்டு முப்பெரும் மறைபரப்புப் பயணங்களைப் புனித சின்னப்பர் மேற் கொண்டார்.

"நற்செய்தியை அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ கேடு" எனக் கூறும் புனித சின்னப்பர், நற்செய்தி அறிவிக்கையில் மறைபரப்புப் பணியில் பட்ட துன்பங்கள் ஆயிரமாயிரம். அவற்றைப் பற்றி அவரே தனது மடலொன்றில் பின்வருமாறு கூறுகின்றார்.

"பல தடவை சிறையில் துன்புற்றேன்.
மிகக் கொடுமையாகச் சாட்டையால் அடிபட்டேன்.
பல முறை மரண வாயிலில் நின்றேன்.
ஐந்து முறை யூதரிடமிருந்து ஒன்று குறைய நாற்பது கசையடிகள் வாங்கினேன்.
மும்முறை தடியால் அடிபட்டேன்.
ஒரு முறை என்னைக் கல்லால் எறிந்தார்கள்.
மும்முறை கப்பற் சிதைவில் சிக்குண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இரவும் பகலும் நடுக்கடலில் அல்லலுற்றேன். நான் செய்த பயணங்கள் மிகப் பல.

அவற்றில் ஆறுகளாலும், கள்ளர்களாலும், இடர்கள், சொந்த இனத்தாரும் வேற்றினத்தாரும் இழைத்த இடர்கள், நாட்டிலும் இடர்கள், காட்டிலும் இடர்கள், கடலிலும் இடர்கள்".

ஆயினும் அவற்றைக் கண்டு புனித சின்னப்பர் பின் வாங்கவில்லை. துன்பத்தைக் கண்டு துவண்டு விடவில்லை. எதிர்ப்புக்களைக் கண்டு ஏமாற்ற மடையவில்லை. இடர்களைக் கண்டு எட்டி நிற்கவில்லை. 'போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித் தூற்றவார் தூற்றட்டும் எனது பணியைத் தொடர்ந்து செய்வேன்' என்று திட சங்கற்பம் கொண்டு பணியாற்றினர். புனித சின்னப்பர் இந்த அளவுக்கு மறை பரப்புப் பணியில் வைராக்கியமாய் இருந்தமைக்குக் காரணம் இறைவன் மேல் வைத்திருந்த நம்பிக்கையேயாகும்.

"எல்லா வகையிலும் வேதனையுறுகிறோம்
ஆனால் ஒடுங்கிப் போவதில்லை.
மனக்கலக்கம் அடைகிறோம் - ஆனால்
மனம் உடைவதில்லை.
துன்புறுத்தப் படுகிறோம் - ஆயினும்
இறைவனால் கைவிடப்படுவதில்லை.
வீழ்த்தப்படுகிறோம் - ஆனால்
அழிவுறுவதில்லை

எனக் கூறுவதிலிருந்து அவரது தளரா விசுவாசமும் அசையாத நம்பிக்கையும் வெள்ளிடை மலையாக உள்ளன.

இதுவரை யாராலுமே மேற்கொள்ளப்படாத மறைபரப்புப் பணியை புனித சின்னப்பர் தனி ஒருவராக நின்று ஆதித் திருச்சபையில் ஆற்றியிருக்கின்றார் என்றால் மிகையாகாது. பல நீண்ட மறைபரப்புப் பயணங்களை மேற்கொண்டார். பல திருச்சபைகளை நிறுவினார், அவற்றை வழி நடத்த, கண்காணிக்க பல மூப்பர்களையும், தலைவர்களையும் ஏற்படுத்தினார். தான் தாபித்த திருச்சபைகள் விசுவாசத்தில் நிலைத்திருந்து, சோதனைகளை மேற் கொண்டு, நற்கனி கொடுத்து வளர்ச்சியடையக் கூடிய வகையில் பல மடல்களை வரைந்தார்.

கிறிஸ்தவ மதம் என்பது யூத மறையின் ஒரு கிளை என்ற குறுகிய கண்ணோட்டத்தைக் களைந்து, யூத மதத்துக்குட்பட்டதுதான் கிறிஸ்தவம் என்ற தடைச் சுவர்களைத் தகர்த்தெறிந்து, கிறிஸ்தவ மதம் அனைத்துலக மதம் என்ற பொதுமைக் கோட்பாட்டை நிலை நாட்ட அரும்பாடு பட்டவர் புனித சின்னப்பர், இவ்விதமாக மறைபரப்பாளர் வரிசையில் முதலிடத்தை வகிக்கின்றார்.


அவரது பணியின் பயனை வாழ்நாளிலேயே கண்டு மகிழ்ந்தார்.

"சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன்
ஓட்டத்தை முடித்து விட்டேன்.
விசுவாசத்தைப் பாதுகாத்தேன்
இனி எனக்கு இருப்பது ஒன்றே.
நல் வாழ்வின் பரிசான வெற்றி வாகை
எனக்காகக் காத்திருக்கிறது."

எனத் தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் கூறும் புனித சின்னப்பரிடம், இறைவன் தன்னிடம் ஒப்படைத்த பணியினைச் செய்து முடித்த வெற்றிப் பெருமிதம் எதிரொலிக்கின்றது.

புனித சின்னப்பர் அதி உயர்ந்த மறைபரப்பாளர் மட்டுமல்ல, தன்னிகரற்ற மறைபரப்பாளருமாவார்.

-அருள்தந்தை பொன்னையா யோசப்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோவ்!.. பிளேன்டீய கொண்டு வந்தியா, வைச்சியா, போனியா எண்டில்லாமல் என்னய்யா மலைமாதிரி எனக்கு முன்னாலயே ரொம்ப நேரமாக நிக்கிறா... சீ...சீ... இந்தக் கண்றாவி புடிச்சவங்களோட பெரிய... தொல்லையா போச்சு...

தம்பி... என்னப்பா... எதில முடிச்சா?.... அதுதான் சேர்.... ஒரு திரில்லிங்கா (Thiriling) அப்பிடியே கதைய மாத்திட்டன் சேர்....

Thiriling இன்னா!... யாரையும் கொலகில பண்ண வச்சிட்டியோ?....

...அப்பிடி இல்ல சேர்... இன்னும் அந்த ரேஞ்சுக்கு கதைய நகர்த்தல்ல சேர்.... நம்ம அய்யாத் துரை இருக்கிறானில்ல.....

எந்த ஐயாத்துரை?.....

அதுதான் சேர்... நம்ம




# அழகின் அலங்காரம்

கதையில வர்ற......

ஓ!... அவனா!.... குடிகாரப் பயல், அவனுக்கு.....?

....ஆமா சேர்... அய்யாத் துரைக்கு.. ஒரு செற்றப்பு...

அப்படி போடுடா தம்பி அரிவாள... இருந்தாலும் தம்பி ஒரு குணசித்திர பாத்திரத்தை அப்பிடியே நம்ம மகா ஜனங்கள் பரிதாபப்படுற மாதிரியும்.... அப்பப்ப கோவப்படுர மாதிரியும் நகர்த்துப்பா....

.... நீங்க சொல்லிட்டீங்கில்ல சேர், இப்ப பாருங்க.... என் பேனா வரிசைய காட்டிர்றன்.

நித்தம் போனால் முத்தம் சலிக்கும் நிதமும் போனால் மனமும் சலிக்கும்" என்பது ஒருபுறம் இத தினமும் போகும் வாடிக்கையாளர்களைத்தான் வியாபாரிகளுக்கு அதிகம் பிடிக்கிறது, இவர்களுக்கு சலுகைகள் வழங்குகின்றனர். ஏன், இவர்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியதில்லை. சரக்குகள் பதுக்கப்பட்டாலும் பின் கதவு விநியோகம் இவர்களுக்கு மட்டும் கிடைக்கும். விலைத்தள்ளுபடியும் இவர்களுக்கு அப்பப்போ கிடைப்பதுண்டு. குறிப்பாக கள்ளுக் கடைகளிலும் சாராயத் தவறனைகளிலும் போயா மற்றும் கடையடைப்பு தினங்களிலும் சத்தம் போடாமல் கவனிக்கப்படுபவர்களும் இந்த வாடிக்கையாளர்கள்தான்.

ஆனால் ஐயாத்துரைக்கு தஞ்சம் அந்த ஹேமாமாலினியின் குசினி தான். இவனோடு சேர்ந்து இன்னும் கொஞ்சப்பேர் இவளுக்கு வாடிக்கையாளர்கள். கள்ளுக் குடிப்பதற்கு எத்தனை பேர் வந்தாலும் ஐயாத்துரைக்கு ஸ்பெஷல் கவனிப்புத்தான். ஏனென்றால் நேர்மையாக காசை எண்ணிக் கொடுப்பது ஐயாத்துரைதான். அதுமட்டுமா, ஹேமாக்கு அப்பப்போ கைகடித்தால் பார்த்தும் பார்க்காமலும் கடன் கொடுப்பான். அவள் கடனைத் திருப்பிக் கொடுக்கும்போது அதில் சில்லறைகளை எல்லாம் அவளையே வைத்திருக்க சொல்லி விடுவான்.

இவ்வளவுக்கும் ஹேமா பெரிய அழகியும் இல்ல, வயசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறைஞ்சவளும் இல்ல, ஹேமா ஐயாத் துரைக்கு மூன்று வயது முத்தவள் பெரீ...ய சைஸ், அரக்கி அரக்கி வரும் அரக்கி.

எந்த ஆம்பிளையும் அவளை ஏமாற்றிவிட முடியாது, அப்படித்தான் இசக்கு முசக்கா குசினிக்குள்ள நடந்தா கேப்பாள் கேள்வி, நாக்கு வெளியவர. தாழ வெட்டப் பட்ட பிளவுஸோட சீத்த லுங்கியும் உடுத்து செம்பட்ட முடியையும் அவிழ்த்துவிட்டு.....

பின் சேர்த்துக் கட்டி சொருகிக்கொண்டு, இடுப்பில் ஒரு கையும், நீட்டிப் பேசும் மற்றொரு கையுமாக அவள் வாயத்துறந்தாள் எண்டால் மினிஸ்டர் என்ன மன்னார்க்குடி மன்னன் வந்தாலும் தலைக்குனிவுதான். ஆம்பிளை எண்டாலே அவளுக்கு அவ்வளவு கீழ்த்தரம். எதுக்காக அவள் ஆண்களை வெறுக்கிறாள் எண்டு பார்த்தால் அவ்வளவுக்கு நரக வேதனையை அவள் புருஷன் - சீ... புருசனில்ல, அவள வச்சிருந்த வனிடத்தில் இருந்து அனுபவிச்சது தான். கள்ளத்தனமா வந்து போகும் அவன் பெயர் கலுமாத்தயா. இவனுக்கென்று பொஞ்சாதி, பிள்ளைகள் எல்லாம் டவுனில் இருக்கு நல்ல வசதிகளோட. கொழும்புக்கு மீன் ஏத்துரதுக்காக முத்தாப்பு ஊருக்குள்ள வந்தவன் வசதியில்லாத ஹேமாமாலினிய வளைச்சுப் போட்டிட்டான். காசைக் காணாதவள் காசைக்கண்டதும் பல்லிளிச்சிட்டாள். 'குளிக்க வந்தவன் குளிச்சு முடிஞ்சதும் சட்டு புட்டென்று நடையைக் கட்டுவான்' எண்டுறத அறியாத அபலைப் பெண்ணானாள். ஈற்றில் வழமையைப் போலவே கலுமாத்தையாவின் பூர்வீகம் அம்பலமாக கதறிக்கதறி அழுதாள் - கைவிடமாட்டேன் என்றான். ஒவ்வொரு தடவையும் வரும் போது இங்குதான் தங்குவேன் - என்றான். கருவாடு போட்டு விக்க உதவி செய்வேன் - என்றான். இதைப் பற்றி மூச்சுவிடக் கூடாதெண்டான். இதற்கெல்லாம் அடிபணியா விட்டால் இரண்டு குழல் துப்பாக்கியால் சுட்டுப் போட்டு, சதக் சதக் எண்டு ஸ்லைஸ் ஸ்லைசா வெட்டிப் போட்டு சுறாமீனுக்குப் பதிலா உன்னத் தான் டின்னில அடைச்சி வெளிநாட்டுக்கு அனுப்புவேன் என்றான். வெள்ளச்சட்ட, வெள்ளச் சரம், அணிந்த முறுக்கிய மீசை ஆசாமி.

ஊர் கண்ணிற்கு களங்கப் படவளாகக் கணிக்கப்பட்ட ஹேமா அடங்கியே போனாள். இருப்பினும் எரிமலைபோல் அவள் இதயத்துக்குள் குளம்புகள் கொதித்த வண்ணமே இருந்தன. இந்த ஊருக்குள்ள இப்படிப்பட்ட சமாச் சாரங்கள் ஒன்றும் புதுசில்ல எண்டாலும் புதுசான ஹேமா இப்படிப் பழசானது வேடிக்கைக்கும், குத்துக்கதைகளுக்கும், ஏளனப்பார்வைக்கும் வழிகோலி விட்டது என்பதுதான் பரிதாபத்திற்குரியகதை.

ஆறு மாதங்களுக்கு முன் அந்தப் பரதேசி கலுமாத்தையா மாரடைப்பால் இறந்து போனான். அடக்கச் சடங்கிற்குப் போனபோது கலுமாத்தையாவின் மனைவி, பிள்ளைகள் ஹேமாவைக் கண்டதும் காறித்துப்பினார்கள், வசை பாடினார்கள். இழவு வீட்டில் இப்படியா நடந்து கொள்வது என்று நாம் கேட்கலாம், ஆனால் நடந்தது என்னவென்றால் கலுமாத்தையா, வீட்டில் மனிசிக்கு பயந்தாங் கொள்ளி. அவள் வைப்பதுதான் சட்டம், அவள் சொல்வதுதான்வேதம். எதற்கெடுத்தாலும் நச்சரிச்சுக் கொண்டே இருப்பாள்... அவளும் என்ன செய்வாள்! ஆஸ்துமா வியாதிக்காரி. எந்த நேரமும் இழுத்தபடி இருக்கும் அவளுக்கு எதிலும் எரிச்சல், திருப்தியற்ற நிலை. ஆஸ்துமா வியாதியின் கொடுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை எலும்பும் தோலுமாய் ஆக்கிவிட்டது. இருந்தாலும் இரண்டு பொம்பிளப்பிள்ளைகள பெத்து ஆளாக்கி விட்டாள்.

எத்தனையோ ஆண்கள் இப்படித்தான். குடும்பத்தில், தாம்பத்திய வாழ்க்கையில் குப்பை கொட்டிக்கொண்டிருக்கிறார்கள். கை நிறைய சம்பாதிச்சாலும் வீட்ட வந்தா நிம்மதி இல்ல. அன்பாய், ஆசையாய்ப் பேச பொண்டாட்டி சரியில்ல. எதற்கெடுத்தாலும் புறணி கூறும் பொண்டாட்டி. அதிலும் திருப்தியற்ற மன நிலையோடு "காணாது... காணாது' என்றே நச்சரிக்கும் திருப்திப் படுத்த முடியாத பொண்டாட்டி. எப்பவோ இருந்து போட்டு ஜாலியா Firends மாரோட போத்தல் பார்ட்டிக்குப் போனா அதையே காலாகாலத்துக்கும் 'தம்பட்டம் அடிக்கும்' பொண்டாட்டி... குடலில் சளி காஞ்சி போய் வாயத் திறந்தா லேயே கெட்ட நாற்றமடிக்கிற பொண்டாட்டி... உடம்பெல்லாம் சள்ள விழுந்து சேப்பே இல்லாமல் ததுக்குப் புதுக்காக மாறிப்போயுள்ள பொண்டாட்டி....

இப்படி ஏகப்பட்ட குற்றச் சாட்டு சுமைகளோட காலம் தள்ளுகின்றவர்கள் இருக்கின்றார்கள். இத்தகைய பரிதாப நிலையாலேயே ஒரு (Keep) கீப்பை செற்றப் செய்வது, வச்சிருப்பது சில கனவான்களின் நிலையாகிவிட்டது. உலகத்தினை மறந்து, கவலை, கஷ்டத்தை மறந்து, நச்சரிப்பை மறந்து, பிள்ளைகளின் சண்டை சச்சரவுகளை, தொல்லைகளை மறந்து, நிம்மதியா, ஆசை தீரக் குடிச்சிட்டு ஆசைநாயகியோடு சல்லாபமாக இருப்பதை பல தடவைகளில் இப்படிப்பட்டவர்கள் நியாயப்படுத்தாமலுமில்லை.

இந்தப் பரிதாப நிலை தான் கலுமாத்தையாவுக்கும். காலப் போக்கில் தனது பரிதாப நிலையை ஹேமாவிடம் மனம் விட்டுச் சொல்லி இருக்கின்றான்.

.....உன்னோடு இருக்கும் மணித்தியாலங்கள்தான் என் வாழ்வில் சுக போகம்... என்று குடித்து விட்டு அழுதிருக்கின்றான்.

இவனது இந்தச் சோகக் கதையைக் கேட்டே ஹேமா இளகிப்போய்விடுவாள். இதனால் அவன் எப்போது வருவான் என்று எதிர்பார்த்திருந்து, அவனுக்குப் பிடித்தது எல்லாமே வாங்கி வைப்பாள். தன்னையும் அலங்காரம் செய்து கொள்வாள். அவனது ஆபாச-ஆசை வார்த்தைகளைக் கேட்ப திலும் அவள் பூரிப்படைந்து கொண்டாள். அதற்காகவே அவன் விரும்புகிறபடி எல்லாம் இசைந்து கொடுத்தாள். இப்படி எல்லாம் திருப்திப்படுத்தி அவன் கண்டதென்ன? அவன் சாவதற்கு அவள் தான் காரணமென்று சொல்லடிகளை மாத்திரம் இல்லாமல் காறித்துப்பப்பட்ட எச்சில்களையும் சன்மானமாகப் பெற்றிருந்தாள். என்ன இருந்தாலும் கலுமாத்தையாவின் இரண்டு பெண் பிள்ளைகளும் இழவு வீட்டிலேயே குடும்பியைப் பிடித்து தாறுமாறாக ஹேமாவை அடித்திருக்கக் கூடாது. அவளும் கலுமாத்தையாவை நெஞ்சிலே சுமந்தவள்தானே! அவன்தான் உலகம், ஏன் அவன் தான் எல்லாமே என்றுதானே அவனுக்காய் அவள் அவளையே இழந்தாள்.

அந்த மனிதநேயமற்ற நிகழ்வோடு அவள் இன்னும் அதிகமாக விரக்தி அடைந்திருந்தாள். ஏனெனில் கடைசியாய் என் நாயகனைப் பார்த்து விடுகிறேன்.... என்னைக் கொஞ்சம் விடுங்கள்.... என்று எவ்வளவு மன்றாடிக் கதறியிருப்பாள்! அவனது வெற்றுடம்பைக் கடைசியாக ஒரு தடவை கூட அவள் பார்க்க அவர்கள் அனுமதிக்க வில்லையே!



ஒருவாறாக ஆறு மாதங்கள் உருண்டோடியபின் கிளறிவிடப்பட்ட ஊற்றுக்கள் மீண்டும் ஹேமாவிடம் முளைத்துவிடத் துடித்தன. இந்தவேளையில்தான் பட்டான் அப்பாவி ஜயாத்துரை, ஆனால் ஜயாத்துரைதான் நேர்மையானவன் ஆயிற்றே!

ஹேமாமாலினியின் வலையில் சிக்கிவிடுவானா...?

மீண்டும் வருவான்

-சா (ஜ) ஹான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வரண்ட நிலத்துக்கு ஒரு நீர்த்துளி போன்ற மறைபரப்பாளர்

**அழைப்பு:**

கடற்கரைப் பிரதேசத்தில் இருந்த குடிசை யொன்றினுள்ளே நோயாளி ஒருவரின் தலையின்மேல் தமது கைகளை வைத்துச் செபிக்கும் புனிதரைப் போன்ற ஒரு மனிதர், செபமாலையைக் கையிலேந்தி செபித்து, நோயாளிக்கு நோயிற்பூசுதலுமளித்தார். திடீரென ஒரு சலசலப்பு, வெளியே ஒல்லாந்தப் படைகள் பின் வீட்டிற்குள் புகுந்து பரிசோதித்த பின் சென்றுவிட்டனர். மக்கள் இறைவனுக்கு நன்றி தெரிவித்தனர். ஒருவர் காவு ஒன்றைத் தோளில் வைத்துப் பிச்சைக்காரனைப் போல அங்கிருந்து வெளியேறி வேறொரு வீட்டுக்குச் சென்று திருப்பலி நிறைவேற்ற ஆயத்தமானார். இவ்வாறு துணிச் சலாகச் செயற்பட்ட மறைபரப்பாளர் வந்தனைக்குரிய ஜோசப்வாஸ் அடிகளார் ஆவர்.

**வந்தனைக்குரிய ஜோசப் வாஸ் அடிகள்:**

இவர் கி.பி. 1651 ஏப்ரல் மாதம் 21ம் நாளில் கோவா மறை மாவட்டத்தைச் சேர்ந்த பெனாலி நகரத்தில், சென்கோவா எனும் கிராமத்தில் பிறந்தார். கிறிஸ்டோபர் வாஸ், மரிய மிரண்டா ஆகியோர் இவரது பெற்றோராவர். சிறு வயதிலிருந்தே ஒரு குருவாக வரவேண்டுமென்ற ஆசையுடன் செபத்தி லீடுபட்டார். பெற்றோர் தமது மகனின் ஆசையை நிறைவேற்ற உதவி செய்தனர். இவர் திருப்பலியைத் தமது வாழ்வின் முக்கிய அம்சமாகக் கொண்டார். சிறுவயதில் தமது உணவைக்கூட ஏழைகளுக்குக் கொடுத்து மகிழும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். கோவா நகரில் இருந்த போர்த்துக்கேயப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்று பின்னர், பிபலினிலுள்ள புனித பவுல் வித்தியாலயத்திலும், பின்னர் கோவையிலுள்ள பல்கலைக் கழகத்திலும் தமது கல்வியை முடித்தார். ஒறத்தோறியானு சபையில் சேர்ந்து கி.பி. 1676ல் குருப்பட்டம் பெற்ற இவர் சேவையையே உயிர்மூச்சாகக் கொண்டார்.

**ஜோசப்வாஸ் அடிகள் இலங்கைக்குச் செய்த சேவை:**

இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சியின்போது கிறிஸ்தவர்கள் ஆயனில்லா மந்தையைப் போலச் சிதறுண்டுகிடப்பதையறிந்த யோசப் வாஸ் அடிகள், கிறிஸ்தவக் குருமார் இலங்கைக்கு வரத்தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில், எவரது வேண்டுகோளுமின்றி, ஒரு கூலியாளாக வேடம் பூண்டு ஜோன் எனும் இளைஞனுடன் கி.பி. 1687ல் இலங்கையின் வடபகுதிக்கடற்கரைக்கு வந்து சேர்ந்தார். உணவோ, உடையோ இன்றி மிகவும் துன்புற்ற இவர் கத்தோலிக்கரைத்தேடிஅலைந்து விரைவில் அவர்களைக் கண்டு கொண்டார். உறுதியான விசுவாசங்கொண்ட இவருக்கு நிலமும், மரநிழலும் வீடாகின. ஒல்லாந்தப் படையினின்று தம்மைக் காத்துக் கொள்ள பிச்சைக்காரனாகவும், துறவியாகவும் வேடம் பூண்டு இரவு பகல் பாராது, வெறுங்காலுடன் பயணஞ்செய்து, வீடுவீடாகத் திருப்பலி ஒப்புக்கொடுத்துத் திருமுழுக்கும் கொடுத்தார். பரிசுத்த ஆவியால் செயற்பட்டு, ஆவலுடன் தம் பொறுப்பை விரும்பி நிறைவேற்றினார் என்பது அவரது வாழ்க்கை வரலாறிலிருந்து தெரிகிறது.

**மலைநாட்டில் இவரது சேவை**

கண்டிக்குச் சென்று சேவையை ஆரம்பித்த வேளையிலே உளவாளி எனச் சந்தேகித்துக் கைது செய்து இரு வருடங்கள் சிறையிலடைத்தனர். அங்கு இவர் தமது சேவையை இடைவிடாது செய்தார். நாடு முழுவதும் வரட்சி ஏற்பட்டபோது அரசனின் வேண்டுகோளுக்கிணங்கி விசுவாசத்துடன் செபித்து மழைபொழிய வைத்தார். மலைநாடெங்கும் தொற்று நோய் பரவ மக்கள் வேறு இடங்களுக்குத் தப்பி யோடியபோது மன்னரும் சென்றார். ஆனால், யோசப்வாஸ் அடிகள் இன்னொரு குருவின் உதவியுடன் நகரெங்கும் சென்று நோயாளரைப் பராமரித்தார். இவரது நன் மாதிரிகையால் பலர் கிறிஸ்தவ மறையைத் தழுவினர். கண்டி, கொழும்பு, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பல இடங்களிலும் இவரது சேவை பரவியது.

இவருக்குதவியாக இந்தியாவிலிருந்து சில குருக்கள் வந்து சேர்ந்தனர். இவர்களுள் யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளும் ஒருவராவார்.

இடைவிடாத சேவை காரணமாக ஜோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ் அடிகளார் நோய்வாய்ப்பட்டார். இறுதியாக கி.பி. 1711ம் வருடம் தைமாதம் 16ம் நாளிலே கண்டியிலிருந்த தமது சிற்றாலயத்தில் "இயேசு" என்று உச்சரித்துக்கொண்டு இறைபதம் சேர்ந்தார். 1995ம் வருடம் தைமாதம் 20ம் நாளில், 2ம் அருளப்பர் சின்னப்பர் பாப்பரசர் இலங்கைக்கு வருகை தந்து யோசப்வாஸ் அடிகளாருக்கு முத்தி பேறுபெற்ற பட்டம் சூட்டினார்.

**வணக்கத்திற்குரிய யாக்கோமே கொன்சால் வேஸ்**

கி.பி. 1705ம் வருடத்தில் இலங்கைக்கு வந்த ஒறத்தோறியன் சபையின் இலக்கிய வளம்படைத்த குருவாகிய யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகள் யோசப் வாஸ் அடிகளாருக்கு உதவியாக இன்னும் பல குருக்களுடன் கோவையிலிருந்து வருகை தந்த வராவார். இவர் இலங்கைக் கத்தோலிக்க இலக்கியத்தின் முன்னோடி ஆவார்.

**கோவையில் இவரது வாழ்க்கை:**

இவர் கோவையின் திவாரி எனும் கிராமத்தில் கொங்கணி எனும் பிராமண வம்சத்தைச்சேர்ந்த குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பக்கல்வியைத் திவாரி யில் கற்று, பின் மேற்படிப்புக்காக புனிதபவுல் வித்தியாலயம் சென்று கற்றுப் பட்டதாரியானார். துறவறத்தை விரும்பிய இவர் இயேசு சபையில் சேர்ந்து ஒறத்தோறியன் சபைக்குருவானார். சங்கீதத்தில் சிறுபராயமிருந்தே ஆர்வங்கொண்டிருந் ததால் வாத்தியங்களை இசைக்கக் கற்றுக் கொண்டார். அத்துடன் பல்வேறு மொழிகளையும் மிகவேகமாகக் கற்றுத் தேர்ச்சியும் அடைந்தார்.

**இலங்கைக்கு வருகை தருதல்:**

இலங்கைக்கு வரும்போது கொங்கணி, இலத்தீன், போர்த்துக்கேய, ஸ்பானிய மொழிகளை அறிந்திருந்ததோடு, இந்தியாவிலும், இலங்கையின் வடபகுதியிலும் தமிழ் மொழியையும் கற்றார். இறைவனால் கிடைத்த ஆற்றல்களினால் இலங்கை மண்ணில் பணிபுரிய மேலும் சிங்கள மொழியின் கிராமிய வழக்கையும் சிங்கள இலக்கிய நூல்களை யும் பிக்குகளிடமிருந்து கற்றுக்கொண்டார். நூல்கள் எழுதும் ஆவலால், கத்தோலிக்கரை இருளிலிருந்து ஒளிக்குக் கொண்டுவருவதற்கு நூல்களை எழுதினார். கிறிஸ்தவ ஒளி அழியாமலும், மங்காமலும் இருப்பதற்கும் இறைபக்தியை நிலை நாட்டவும்



இறைமகிமையை உறுதிப்படுத்தவும் நூல்களை எழுதினார். சிங்கள மொழியில் இருபதும், தமிழில் பதினெட்டு நூல்களையும், போர்த்துக்கேய மொழியில் சிலவற்றையும், ஒல்லாந்த மொழியில் ஒரு நூலையும் எழுதினார். கிறிஸ்து பிறப்பு, வியாகுல பிரசங்கம், மோட்சபாதை, ஒப்பாரி, புலம்பல், செபங்கள் போன்றவற்றுடன் அரசியல், பொருளாதாரம், சமூகநீதி ஆகியவற்றிலும் நூல்களை எழுதினார்

தேவ வேதபுராணம், தேவந்தி, விசர்ஜெனய, வேதகாவியம் போன்ற ஆழமான நூல்களையும் சுகதர்ப்பு, பிரார்த்திகா யார்வுலிய போன்ற கிராமிய மொழிப்புத்தகங்களையும், கிறிஸ்தியானி பள்ளிய, பசன்பொத, ஆனந்தக்களிப்பு, மங்கள கீதய, சுவிசேஷ விசாதனமய பிரதாக்சய, பேதகாரயண்கே தர்கணய் முதலியவற்றையும் இவர் எழுதினார். அச்சேற்றும் வசதி முன்னேற்றமடையாத அக்காலத்தில் எழுதிவினைஞர் மூலம் துணைப் பிரதிகளை எழுதுவித்தார். தேசிய பாடல்களுடன், தேசிய சங்கீதத்தைப் புகுத்திக் கோயில் கீதங்களை இயற்றியதுடன், தேசிய நாட்டியக்கலைக்கும் உதவினார். இவர் எழுதிய புலம்பல், ஒப்பாரி என்பன இன்றும் கத்தோலிக்கரிடையே பாடப்படுகிறது. கத்தோலிக்க இலக்கியத்தை இலங்கையில் மிளிரச் செய்ய முன்னின்று செயலாற்றிய இவர் தமது வாழ் நாள் முழுவதையும் கிறிஸ்தவர்களுக்கு அர்ப்பணித் தார் என்றே கூறலாம்.

-மெற்றில்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பதகளிப்பு நோய்
## (ANXIETY DESORDER)

பொதுவாக மனிதனுக்கு அச்சம், பயம், பதற்றம், பதகளிப்பு போன்ற பிரச்சினைகள் காணப் படும்; இது இயல்பானது.

விவிலியத்தில் கூட நாங்கள் இதனைப் பார்க்கின்றோம். “ஏதேன்” தோட்டத்தில் விலக்கப் பட்ட கனியை உட்கொண்ட பின்னர் முதற்பெற்றோர் ‘இனி என்ன நடக்குமோ’ என்ற ‘பயத்தில்’ மிகவும் அச்சப்பட்டவர்களாக கடவுளின் குரலைக் கேட்டு பதகளிப்புடனேயே ‘கடவுளே உம்மைக் காண எமக்கு மிகவும் அச்சமாக இருக்கிறது’ என்றார்கள். அன்று தொடங்கிய இந்தப் பயம், பதற்றம், பதகளிப்பு, அச்சம் என்பன இன்றும் எல்லோரிடமும் இடைவெளி இல்லாமலேயே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

தம்மை மறந்து, மனிதசக்தி மட்டில் நம்பிக்கைகொண்டு எதேச்சையாக, தான் தோன்றித்தனமாகச் செயற்படுகின்ற மக்களை தண்டிப்பதற்காகவும், அவர்களை மனம் மாற்று வதற்காகவும் கடவுளே இயற்கை அனர்த்தங்கள் ஊடாக அவ்வப்போது பலவற்றைச் செய்தார், இறுகிய மக்களின் மனங்களை இழகவைத்தார்.

“இஸ்ராயலரை’ அடிமைப்படுத்திய “எகிப் தியர்களை” அச்சங்கொள்ளச்செய்ய கல்மழையை அவர்கள் மீது பொழியச்செய்தார். தவளைகளை பெருகச்செய்து நகர்முழுவதையும் நிரப்பினார். ‘சொதோம், கொமொராவை’ அழித்தார். ‘நோவாவின் காலத்தில் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தினார். இவ்வாறு பழைய ஏற்பாட்டில் பலவற்றை பார்க்கிறோம்.

நாம் அறிந்த காலம் வரையில் கூட உலகில் பல நாடுகளில் அவ்வப்போது, மழை, வெள்ளம், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, கடும்வரட்சி, பூமியதிர்வு, பூகம்பம், காட்டுத்தீ, எரிமலைச்சீற்றம், சுனாமிப்பேரலைகள் என்று மனிதனைப் பல்வேறு வடிவங்களில் தண்டிக்கச் செய்கிறார். இருந்தபோதும் ஒருசில இடங்களில், ஒருசில மனிதர்களில் இந்த மனமாற்றம் தெரிகிறது.

பெரும்பாலானோர் இன்று ஆன்மீகத்தைத் துறந்து நாத்தீகம் பேசி பெரும் மனித அழிவுகளைச் செய்வதைப் பார்க்கிறோம்.

இஸ்ராயேல் இன்று மற்றையநாடுகளை ஆக்கிரமிக்க துடியாத் துடிப்பதைப் பார்க்கிறோம். முன்னர் தாம் பட்ட கஷ்டங்களை அவர்கள் கொஞ் சமும் நினைப்பதில்லை.

சுனாமிப் பேரலை தென்கிழக்காசியவைத் தாக்கி பலநாடுகளை மண்ணோடு மண்ணாக்கி, பலமக்களின் உயிர், உடைமைகளைக்காவு கொண்டது. கடவுள் மீண்டும் ஒருதடவை “மனிதா நீ மண்ணாய் இருக்கிறாய், மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய்” என்ற செய்தியை இதன் மூலம் சொன்னார். இந்தோனேஷியா, இலங்கை போன்ற நாடுகள் இந்தச் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டன. இந்த மனித அவலம் ஒருவகையில் இந்தோனே ஷியாவின் ‘ஆச்செ’ பிராந்தியத்தின் உள்ளூர்ப் பிணக்கைப் பேச்சுவார்த்தை ஊடாகத் தீர்ப்பதற்கு வழியேற்படுத்தியது.

மறுமுனையில் இலங்கையின் உள்நாட்டுப் போர் சுனாமிப் பேரலைகளிற்கு மேலெழுந்து இன்று பெரும் மனித அவலங்களைச் செய்து வருகின்றது. இதில் சம்பந்தப்பட்ட எந்தவொரு தரப்புமே எமக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறது என்ற உண்மையை உணரவில்லை. அது குறித்துப் பயப்படவுமில்லை. தமது சக்திகளில் நம்பிக்கை கொண்டு தொடர்கின்ற இந்த யுத்தம் மனித அவலங்களை ஏற்படுத்தி ஒட்டு மொத்தமாக முழு இலங்கையருமே பயம், பதற்றம், பதகளிப்பு போன்ற நிலைகளிற்கு உள்ளாக்கி இருக்கின்றது. இதனால் இன்று இலங்கையில் உள்ள ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு சமூகமும், ஒவ்வொரு சமயமும் ஒன்றில் மற்றொன்று சந்தேகப் படவும், பயப்படவுமே வழிவகுத்து நிற்கின்றன.

சாதாரணமாக மனிதர்களில் காணப் படுகின்ற இவ் அச்சம், பயம், பதற்றம், பதகளிப்பு, என்பன எமது சாதாரண வாழ்க்கைக்குத் தேவையானவை. இதன் மூலம் தான் நாங்கள் விபத் துக்கள், ஆபத்துக்கள், அவசர நிலைமைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைத் தற்காத்து உயிர்வாழ்கிறோம். அதே வேளை ஒரு வரையறை, வரம்பினுள் இருக்கவேண்டிய இவ் அச்சம், பயம், பதற்றம், பதகளிப்பு என்பன நோய்களாக மாறும் போது மிகுந்த வேதனையே.

பதகளிப்பு என்பது பயம் அல்லது நெருக்கீடு காரணமாக வெளிக்கொணரப்படுகின்ற சாதாரண, உணர்வு பூர்வமான உடலியல் இடர்ப்பாடாகும். இது இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான உடலியல் இசைவாக்கம் ஆகும். இதன் மூலம் உடல், உள ரீதியில் எப்பிரச்சனைக்கும் முகம் கொடுக்க முடிகின்றது. அதாவது, ஆபத்தானது என்று கணிப்பிடப்படும் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுவதற்கான காரணம் அல்லது அதனின்று விலகிவிடுவதற்கான உடல் - உள உசார் படுத்தலாகும். (Fighr & Flight) இது உடலில் உள்ள சில ஓமோன்களின் (Hormones) செயற்பாடுகளினால் நடக்கிறது. அந்தச் சூழ்நிலை விலக எமது உடலில் இருந்து இவை விலகிவிடும்.

இவ்வாறாக இயற்கையாக இடம்பெறுகிற பயம் அல்லது கவலை எமது வரம்புக்கும் மீறி தொடர்ந்து காரணமின்றித்தோன்றும் போது அதனை பதகளிப்புக் கோளாறு (ANXIETY DISORDER) எனலாம்.

**ANXIETY DISORDER**

- பொது பதகளிப்புக் கோளாறு {Generalize Anxiety Disorder (GAD)}
- அச்ச நோய் (Phobic Disorder)
- பீதி நோய் (Panic Attack)
- நெருக்கீட்டிற்கு பிற்பட்ட உளவடு நோய் {Post Traumatic Stress Disorder (PTSD)}
- மீள, மீள நிகழும் எண்ணச்சிக்கல் கோளாறு {Obsessive Compulsive Disorder (OCD)}

**பொதுவான பதகளிப்புக் கோளாறு (Generalized Anxiety Disorder (GAD)**

இது பொதுவானவொரு பிரச்சினையாகும், யாரும் எச்சந்தர்பத்திலும் இதனால் பாதிக்கப் படலாம். பொதுவாக யுத்த அனர்த்த சூழல்களில் வாழ்கின்ற மக்கள் இந்நோயினால் பெருமளவில் பாதிக்கப்படலாம். நோயறிகுறிகள் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 6 மாதங்களிற்கு மேல்வரை கூட நீடிக்கலாம்.

**உடலியல் அறிகுறிகள்:**

பதகளிப்பு நோயினால் பாதிக்கப்படுபவர் கட்கு பொதுவாக எமது உடலில் காணப்படுகிற இச்சையின்றிய நரம்பிகளின் செயற்பாடுகளும், சில ஓமோன்களின் (Hormones) செயற்பாடுகளும் மிகையாகக் காணப்படும், இதன் விளைவாக

- நெஞ்சுப்படபடப்பு ((Palpitation)
- ஆழமற்ற விரைவான சுவாசிப்பு (Shortness of breathing)
- வாய் உலர்தல் (Dry Mouth)
- நடுக்கம் (Tremors)
- அடிக்கடி சிறுநீர் கழித்தல் (Urinary frequency)
- வயிற்றுப் போக்கு (Diarrhoea)
- வியர்த்தல் (Sweating)
- பாலியல் கோளாறுகள் (Sexual Disorders)
- உடல் முழுவதும் குளிர்ந்து காணப்படல் (Cold Clammy extremities)

**உளரீதியான குணங்குறிகள்**

- பயம் (Anxiety)
- பதற்றம், ஏக்கம், கவலை (Sadness)
- தசை இறுக்கம் (Tension)
- களைப்பு (Tiredness)
- திடுக்குறுதல் (Trembling)
- நித்திரையின்மை (Insomnia)
- பயங்கரக் கனவுகள் (Dreams)
- வேலையில் மனதை ஒருமுகப்படுத்த முடியாமை (Poor concentration)

என்பன காணப்படும்

- தொடரும்.


-Dr.ஜூடி ரமேஷ் ஜெயக்குமார்

**(வாசக நேயர்கள் கேட்கும் மருத்துவம் தொடர்பான கேள்விகளுக்கு இப்பகுதியில் விடை அளிக்கப்படும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்கள்' பகுதிக்காக மட்டக்களப்பு மாவட்டத் தொழில் அலுவலகத்தில் தொழில் உத்தியோகத்தராகக் கடமை புரியும் திரு. வில்வலிங்கம் குகதாசன் அவர்களைச் சந்தித்தோம். தொழில் திணைக்களத்தில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரியும் திரு. வி. குகதாசன் அவர்கள் தொழிலாளர் பிரச்சினைகளில் நீண்டகால அனுபவமிக்கவர். கேட்கப்பட்ட வினாக்களுக்கு மிகவும் தெளிவாகப் பதிலளித்தார். உண்மையில், தொழில்திணைக்களம் மற்றும் அதன் கடமைகள் பற்றி எம்மில் பலருக்கும் தெரிவதில்லை. சில தசாப்தங்கட்கு முன்னர் வேலை வாய்ப்புக்காகப் பெயர்களைப் பதியுமோர் இடமாகத்தான் அவ்வலுவலகத்தைப்பற்றி மக்கள் அறிந்திருந்தனர். ஆனால் அவ்வலுவலகம் புரியும் பல பணிகளும் வெளிக்கொணரப்படுவதில்லை. இச் செவ்வி மூலம் அப்பணிகள் பற்றி வாசகர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்புகள் உண்டாகும் என நம்புகின்றோம். இனிச் செவ்விக்கு வருவோம்.

**உங்கள் தொழில் திணைக்களத்தின் கட்டமைப்பு பற்றி சற்றுக் கூறமுடியுமா?**

இத்திணைக்களத்தின் தலைமைப் பணிமனை கொழும்பில் அமைந்துள்ளது. மாவட்டங்கள் தோறும் மாவட்டப் பணிமனைகள் உள்ளன. கிளிநொச்சி, கல்முனை போன்ற இடங்களில் உப அலுவலகங்கள் காணப்படுகின்றன.

**இத்திணைக்களத்தின் அடிப்படை நோக்கம் என்ன?**

தொழிலாளர், தொழில் கொள்வோர் மத்தியில் நல்லுறவைப்பேணுதல், அவர்களின் கடமை, உரிமை தொடர்பான நலன்புரிகளைத் தொடர்ந்து கண்காணித்தல், அவை தொடர்பான தொழிற்சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், அநுகூலங்களை இருதரப்பாரும் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துதல் என்பனவே முக்கியமான நோக்கங்கள் ஆகும்.

**'தொழிற்சட்டங்கள்' என்று குறிப்பிட்டீர்களே, அவை பற்றிக் கூறமுடியுமா?**

ஆம், கட்டாயமாக! அதில் இருவகையுண்டு. சமூகப் பாதுகாப்புச் சட்டம், விசேடமான சட்டங்கள் என்பனவே அவை. சமூகப் பாதுகாப்புச் சட்டம் என்று சொல்லும்போது ஊழியர் சேமலாப நிதிச்சட்டம், ஊழியர் நம்பிக்கை நிதிச்சட்டம், ஊழியர் பணிக் கொடைச் சட்டம், மகப்பேற்றுச் சட்டம், தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டம் என்பன அதனுள் அடங்கும்.

**அப்படியானால் விசேடமான சட்டங்கள் எவை?**

கடை காரியாலயச் சட்டம், சம்பளச்சபைகள் சட்டம், கைத்தொழில் பிணக்குச் சட்டம், வேலை முடிவுறுத்தல் சட்டம், பெண்கள், சிறுவர், இளைஞர் வேலைவாய்ப்பு தொடர்பான சட்டம், தொழிற்சாலைகள் சட்டம் என்பனவே அவை.

**இச்சட்டங்களை நடைமுறைப்படுத்த திணைக்களத்தில் விசேட அதிகாரிகள் உள்ளனரா?**

ஆம் உள்ளனர். எல்லாவற்றிற்கும் பொறுப்பாக தொழில் ஆணையாளர் நாயகம் உள்ளார். ஒவ்வொரு சட்டப் பகுதிக்கும் பொறுப்பாக ஒவ்வொரு தொழில் ஆணையாளர் இருக்கின்றார். இவ்வாறே பிரதித் தொழில் ஆணையாளர், உதவித் தொழில் ஆணையாளர், மனிதவள மேம்பாட்டு உத்தியோகத்தர் என்போர் உள்ளனர். இவர்களைத் தவிர நிர்வாகத்தைக் கவனிக்க முகாமைத்துவ உதவியாளர், ஊழியர் என்போரும் உண்டு.

**ஊழியர் சேம இலாப நிதிச்சட்டம் பற்றிச் சற்று விளக்குவீர்களா?**

அரசாங்க ஊழியர்கட்கு இளைப்பாறும் போது ஓய்வூதியம் கிடைக்கின்றது. ஆனால் தனியார் துறையினருக்கு அவ்வாய்ப்பு இல்லை. தனியார் துறையினருக்கும் பிற்கால வாழ்வு சீராக அமைவதற்கு உதவியாக, தொழிலாளரும், தொழில் கொள்வோரும் சேர்த்து சேமிப்பொன்றை மத்தியவங்கியில் செய்கின்றார்கள். சட்ட ஏற்பாடுகளின்படி தொழில் தருனர், தொழிலாளர் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்து அங்கத்தவராக்கி உரிப்புரிமை இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதன் பின்னர் தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் தொடர்பான சேமலாப நிதி உதவுத் தொகைகளை மாதம் தோறும் மத்திய வங்கிக்குச் செலுத்த கடப்பாடு உடையவர்களாக இருப்பர். இதில் தொழிலாளர் மொத்த உழைப்பில் 8% ஐயும், தொழில் தருனர் 12% ஐயும் சேர்த்து 20% ஐ மத்தியவங்கிக்கு அனுப்பவேண்டும். இவைதொடர்பான விபரங்களை மாவட்ட தொழில் திணைக் களத்திற்குத் தெரிவிக்க வேண்டியது அவசியம். ஊழியர் சேமலாப நிதி உறுப்பினர் தன்சார்பில் செய்யப்பட்ட இவ்வுதவுத் தொகையை, ஆண் ஊழியர் எனின் 55வயது பூரணமான பின்னரும், பெண் ஊழியர் எனின் 50வயது பூரணமான பின்னரும் தொழில் திணைக் களத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**மொத்த உழைப்பு என்னும் போது அடிப்படைச் சம்பளத்தையா குறிக்கின்றது?**

இல்லையில்லை. அடிப்படைச்சம்பளம், அலவன்சுகள் உட்பட்ட மொத்த உழைப்பைத்தான் குறிப்பிடுகின்றோம்.

**ஊழியர் நம்பிக்கை நிதியம் (E.T.F) பற்றிச் சற்றுக் கூறுங்களேன்?**

இது நிதியமைச்சின் கீழ் வருகின்றது. தொழில் தருனரால் மட்டும் செலுத்தப்படவேண்டிய பங்களிப்பு ஆகும். ஊழியரின் மொத்த உழைப்பில் 3% ஐ தொழில் தருனர் செலுத்தவேண்டும். இத்திட்டத்தில் உடனடி நன்மைகள் பல உண்டு. 70வயது வரை ஆயுட்காப்புறுதி வசதியுண்டு: இருதயசத்திரசிகிச்சைக்காக ஓர் இலட்சம் ருபாய் பெறலாம், கண் வில்லைகளைப் பொருத்துவதற்கு ஒருவில்லைக்கு ருபா 3000 பெற்றுக் கொள்ளலாம். வேலையை விட்டபின் அல்லது இளைப்பாறியபின் அல்லது வேலையில் இருந்து நீக்கப்பட்டபின் உடனடியாக நிதியப்பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஊழியர் பணிக் கொடைச்சட்டம்பற்றி...**

1983ல் இச்சட்டம் உண்டாக்கப்பட்டது. ஊழியர் ஒருவர் இளைப்பாறும் போது தொழில் தருனரால் உதவுதொகையொன்று வழங்குவதை இச்சட்டம் சொல்லி நிற்கின்றது. இதற்கான சில விசேட ஏற்பாடுகள் உண்டு. அதாவது தொழில் தருனரின் கீழ் 15க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடமையாற்றவேண்டும். அத்துடன் குறிப்பிட்ட தொழிலாளர் தொடர்ச்சியாக 5வருடங்கள் வேலை செய்திருக்க வேண்டும்.

செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுக்கு ஒரு சூத்திரம் உண்டு. (மொத்தசம்பளத்தின் 1/2பங்கு சேவைசெய்த ஆண்டுகளின் எண்ணிக்கை) என்பதே அச்சூத்திரம் ஆகும். இளைப்பாறிய 30 நாட்களுக்குள் பணக்கொடை கொடுக்கப்படவேண்டும். இல்லாவிடில் 10% - 30% வரை தண்டப்பணம் செலுத்தவேண்டி நேரிடலாம்.

**மகப்பேற்றுச்சட்டம் என்ன கூறுகின்றது?**

பெண் ஊழியர் ஒருவருக்கு முதல் இரண்டு குழந்தைகட்கும் பிரசவ விடுமுறையாக 84 நாட்களும் அடுத்த பிள்ளைகட்காக 42 நாட்கள் விடுமுறையையும் பெறலாம். இக்காலகட்டத்தில் பாதிப்பான வேலை எதையும் பெண் ஊழியர்கட்கு கொடுக்கக் கூடாது: அத்துடன் எவ்விதமான வேலைநீக்கல் கடிதங்களையும் மகப்பேற்றுக்காலத்தில் கொடுக்கமுடியாது. இவற்றுக்கு மேலதிகமாக வழமையான ஓய்வு நேரம் தவிர பாலூட்டும் இடைவேளையாக 1 மணித்தியாலம் கொடுக்கப் படவேண்டும். இது ஒருவருடத்திற்கு அமுலில் இருக்கும்.

**தொழிலாளர் நட்டஈட்டுச்சட்டம் என்பது பற்றி...?**

தொழிலாளர் ஒருவர் தொழிலில் ஈடுபடும் போது விபத்தில் சிக்கினால் நட்டஈடு பெறும் உரிமையுண்டு. மரணம் அல்லது இயலாமை ஏற்பட்டு 2 வருடங்களுக்குள் விண்ணப்பிக்கவேண்டும். (நட்ட ஈட்டைப் பெற), இதற்குப்பொறுப்பாக 'நட்டஈடுதொடர்பான தொழில் ஆணையாளர்' உள்ளார். இவரின் அலுவலகம் கொழும்பு -2, வக்சோல் வீதியில் அமைந்துள்ளது.

**சாப்புச் சட்டம் என்னும் ஒருசட்டம் முன்னர் இருந்தது, அது 1977ம் ஆண்டின் பின் அமுலில் இல்லை. அதன் பின்னர் கடை காரியாலயச்சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது உண்மையா?**

ஆம்! இச்சட்டத்தின் மூலம் சிலவிடயங்கள் வரையறுக்கப் பட்டுள்ளன.

கடைச் சிப்பந்தியொருவர் 1 மணித்தியால மதிய உணவு விடுமுறையுட்பட 9 மணித்தியாலங்கள் மட்டுமே வேலை செய்யலாம். மேலதிக வேலைகட்கு மேலதிக நேரக்கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும். அத்துடன் சம்பளத்துடன் கூடிய பின்வரும் விடுமுறைகள் கொடுக்கப்படவேண்டும். வாராந்த விடுமுறை 1 1/2 நாள், வருடாந்த விடுமுறை 14 நாள், அமைய விடுமுறை 7 நாள், பொது விடுமுறை 8 நாள், போயாவிடுமுறை 12 நாள்.

**அப்படியானால் வாரத்தில் ஒருநாள் கடை பூட்ட வேண்டும் என்றில்லையா...?**

இல்லை. தொழிலாளர்கட்கு முறை மாற்று நேர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணைப்படி வேலை வழங்குவதன் மூலம் கடையை முழு வாரமும் திறக்கலாம். முன்னர் குறிப்பிட்டதற்கு மேலதிகமாகக் கூறப் போனால்.... மாதச்சம்பளம் எனின் அடுத்தமாதம் 10ம் திகதிக்கு முன்னரும், வாரச்சம்பளம் எனின் அடுத்த 3ம் நாளுக்கு முன்பும் கொடுத்தாகவேண்டும். வாராந்தம் 45 மணித்தியாலயத்திற்குமேல் வேலை செய்தால் மேலதிகநேரக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும். வாரத்தில் 12 மணித்தியாலங்கட்கு மேல் மேலதிகநேர வேலை செய்ய இயலாது. காற்றோட்டம், கழிப்பறைவசதி, இருக்கை வசதி என்பன கண்டிப்பாக இருக்கவேண்டும். சம்பளம், வரவு, விடுமுறை தொடர்பான பதிவேடுகள் பேணப்படல் வேண்டும்.

**ஏனைய சட்டங்கள் பற்றி...?**

தொழிலாளி ஒருவரின் ஆகக்குறைந்த சம்பளம் என்ன என்பதை சம்பளச்சபைகள் சட்டம் வலியுறுத்துகின்றது. சம்பளச்சபை உறுப்பினர்களாக தொழிலாளர் சாரபில் எழுவரும், தொழில் தருணர் சார்பில் எழுவரும் அரசாங்க சார்பில் ஆணையாளரும் இருப்பார்.

தொழிலாளர் - தொழில் தருணர் நல்லுறவைப் பேணவும் பிணக்குகள், முரண்பாடுகளை சுமுகமாக இணக்கப்பாட்டுடன் தீர்க்கவும் கைத்தொழில் பிணக்குகள் சட்டம் உதவுகின்றது. தொழில் நியாய சபை மூலம் வேலைநீக்கம் அல்லது நட்டஈடு அல்லது மீண்டும் வேலை வழங்குதல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெறலாம். 15 பேருக்குக் குறைவான ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களில் வேலை செய்வோர், நீதிச்சேவை ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் தொழில் நியாயச் சபை மூலம் தீர்வு பெறலாம்.

வேலை முடிவுறுத்தல் சட்டமானது 1971ம் ஆண்டு இளைஞர் கிளர்ச்சியின் பின் கொண்டுவரப்பட்டது. தொழில் தருணர் ஒருவர் தனது நிறுவனத்தை தன்னிஷ்டப்படி மூடிவிடமுடியாது. தொழில் ஆணையாளருக்கு விண்ணப்பித்து அவரின் தீர்ப்பின் பிரகாரமே நடைமுறைப்படுத்தவேண்டும். இங்கு ஆணையாளரின் தீர்ப்புக்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்ய முடியாது.

பெண்கள், சிறுவர், இளைஞர்களை வேலைக் கமர்த்துதல் தொடர்பான சட்டப்படி 14வயதிற்குக் குறைவான சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் கூடாது. இவர்கட்கு கட்டாயக்கல்வி வழங்குவது அவசியம். 2003ம் ஆண்டுத் திருத்தத்தின்படி இக்குற்றத்திற்கு - சிறுவர்களை வேலைக் கமர்த்துதல் - ரூபா 10000 தண்டம், 6-12 மாதச் சிறை என்பன வற்றுடன் நீதிபதி முடிவு செய்யும் நட்டஈட்டைச் செலுத்த வேண்டும்.

இப்படியான சிறுவர் தொடர்பான நடவடிக்கைகளில் தொழில் திணைக்களம், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் என்பன கூட்டாக இணைந்தே ஈடுபட வேண்டும்.

பெண்களைப் பொறுத்தவரை இரவு 10 மணிக்குமேல் வேலைகளில் ஈடுபடுத்தமுடியாது. அப்படி ஈடுபடுத்த வேண்டிவரின் 1 1/2 மடங்கு சம்பளம், மேற்பார்வையாளர் ஓய்வு அறை என்பன வழங்கவேண்டும்.

தொழிற்சாலைகள் சட்டத்தின்படி தொழிற்சாலைகளில் பொறியியலாளர்கள் இருக்கவேண்டும், துப்பரவு பேணப் படவேண்டும், இயந்திரங்கள் மூடப்பட்டிருக்கவேண்டும், பொருத் தமான உபகரணங்கள் தொழிலாளர்களினால் அணியப் பட்டிருக்கவேண்டும், வெப்பம், சத்தம் என்பன கட்டுப்படுத்தப் படவேண்டும், சுற்றாடல் பாதிப்பில்லாது பேணப்படவேண்டும்.

**தெளிவான பதில்களையும், விளக்கங் களையும் பெற்றுக் கொண்டபின் திரு.வி. குகதாசன் அவர்களிடம் 'தொண்டன்' சார்பில் நன்றி கூறி விடை பெற்றோம்.**

**-ஆழியோன்**





| 1ம் பரிசு - 300/= | 2ம் பரிசு - 200/= | 3ம் பரிசு - 100/= |
|---|---|---|
| அனபெல் டி சௌசா<br>508 அம்பாள் வீதி<br>அன்புவழிபுரம்<br>திருகோணமலை | S.தர்ஷனா<br>சிங்கள மகாவித்தியாலயம்<br>(அகதிமுகாம்)<br>மண்முனை, மட்டக்களப்பு. | M. பெலிசிற்றஸ்<br>இல-16 N.H.DA.வளவு<br>கிரிவன்டல, புவக்பிட்டி<br>அவிசாவலை. |

போட்டியில் பங்கு கொண்ட தம்பி, தங்கையர் அனைவருக்கும் எமது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இயேசுவும் இறையரசும்

நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்து இவ்வுலகில் ஸ்தாபிக்க வந்த அரசே இறையரசாகும். இது இயேசுவையும், அவர் கொண்டு வந்த அரசையும், எல்லாவகையிலும் சார்ந்திருந்தமையினையும் குறிக்கிறது. இதன் அடிப்படையில் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோரது நற்செய்தியின் மையப்பகுதியும் இவ் இறையரசினைச் சார்ந்ததாகவே அமைகிறது. இவ் இறையரசினுள் நுழைய சில கடமைகள் இவ்வுலகில் செய்யப்பட வேண்டும். அவற்றினைப் பற்றி மத்தேயு, மாற்கு, யோவான் மூவரும் மூன்று கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளனர்.

இறையரசினை இவ்வுலகில் நிறுவுவதே இயேசுவின் போதனைகளின் நோக்கமாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே அவர் இறையரசுக்கு முதலிடம் வழங்கினார். இறையரசானது புலன்களைக் கடந்த ஓர் உண்மை, இருப்பினும் சிறியோருக்கும், தாழ்ச்சியுடையோருக்கும் மட்டுமே இதனை அவர் வெளிப்படுத்தினார், ஏற்றுக் கொண்டவர்கள் இதில் பங்கெடுத்தனர். இவ் வரசினுள் செல்ல சில சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், அதற்குரிய நிபந்தனைகளையும் நற்செய்தியாளர்கள் விளக்கியுள்ளார்கள்.

மற்றும் மத் 5:1-12 இல் மலைப்பொழிவின் எட்டுப் பேறுகள் பற்றியும், இப்பேறுகளிலே இறையரசின் அங்கத்தவர்கள் பற்றியும், இறைவன் மட்டிலும், சகமனிதர்கள் மட்டிலும் கொண்டிருக்க வேண்டிய உறவை வலியுறுத்தும் நிலை பற்றியும் கூறப்படுகிறது.

மேலும் இறையரசில் நிலவும் ஒற்றுமை பற்றி யோவான் குறிப்பிடுகையில் இயேசு தனக்காகவும், சீடர்களுக்காகவும், திருச்சபைக்காகவும் செபிக்கிறார் என்பதனை யோ 17:1-26 இல் அழகாகக் கூறியுள்ளார். மேலும் இயேசு, இறையரசினை இலகுவில் பாமர மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும், அதன் ஆழ்ந்த உண்மைகளை எடுத்துரைக்க உவமைகளைப் பயன்படுத்துகிறார். அத்துடன் இயேசு உவமைகளில் கூற ஒரு முக்கிய காரணம் இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனாவில் நிலவிய அரசியல் சூழ்நிலையாகும். யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியாவாய் இயேசு வராததினால் இந்நிலை உவமைகளாக சித்தரிக்கப்படுகிறது. இவற்றின் மூலம் இறையரசின் தன்மை, இயல்பு, அங்கத்தவர்கள் பற்றி உவமைகள் மூலம் மிக அழகாகப் போதித்தார். இவற்றில் முக்கியமானவைகள் திருமணவிருந்து உவமை, புதையல், முத்துக்கள், வலை கடுகுவிதை, திராட்சைச்செடி, ஆட்டுப் பட்டி பற்றிய உவமைகள் ஆகும்.

மேலும் இறையரசு பற்றிய நிபந்தனையிலே மாற்கு 1:14-15 இயேசு இறையாட்சி நெருங்கிவிட்டதாகவும் மனம் மாறி நற்செய்தியை நம்பும்படியும் கட்டளையிடுகிறார். இங்கு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குமுள்ள அடிப்படை மனநிலை பற்றிப் போதிக்கிறார். நம் மனநிலை குழந்தைகளைப் போல் மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்பட்டாலே இறையரசினைக் காணமுடியும் என நிபந்தனை விதிக்கிறார். குழந்தைகள் போல் மனதை மாற்றியவன் நற்செய்தியை நம்ப வேண்டும் (இயேசுவை) இந்த நிலைப்பாடு புலன்களுக்கு அப்பாற்பட்டது. இந் நிகழ்வை ஏற்றுக்கொள்ளும் போதுதான் இறையரசினையும் நம்ப முடியும் எனக் கூறப்படுகிறது.

எனவே எத்தகைய உள்ளம் கொண்டவர்களாய் நாம் வாழ வேண்டும், எவைகளை கடைப் பிடிக்கவேண்டும், எவ்வாறு மாறவேண்டும் என்பதையும் அத்தகையவர்களுக்கே தம் அரசு சொந்தம் என்பதையும் மிக அழகாகக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வரலாற்றில் மட்டக்களப்புத் தமிழகம்

முத்தமிழ் அறிஞர் சுவாமி விபுலானந்தர் அவர்களால்........

ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குண திசையைச் சேர்ந்து வளர் புகழும்
ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவைத் தீங்கன்னலொடு
தெங்கிளநீரும் தீம்பலவினள்அமிர்தம்
எங்குங் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக்களப் பென்னும் மாநாடு.....

என்று போற்றிப் புகழப்பட்ட மட்டக்களப்பு மாநாட்டின் வரலாறு உலக அரங்கில் இன்னும் சரியாக ஒலிக்கப்படவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று தெளிவற்ற ஒரு வரலாற்றினை மட்டக்களப்புத் தமிழகம் கொண்டிருப்பது, மற்றது ஆற்றல் வாய்ந்த ஓர் அரச பரம்பரை இந்த மண்ணில் தோற்றம் பெறாமை.

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன் (1519-1554) போல் அல்லது வன்னிப் பெரு நிலத்தின் பனங்காமத்துப் பண்டார வன்னியன் (1777-1811) போல் ஒரு மன்னன் மட்டக்களப்பு மாநிலத்திற்கும் வாய்த்திருப்பானாகில் இதன் வரலாறு வேறு விதமாகவே அமைந்திருக்கும்.

ஈழத்தின் ஒரு முக்கிய மாநிலமான மட்டக்களப்புத் தமிழகம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக (கி.மு. 2ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8ம் நூற்றாண்டு வரை) மகாகந்தக்குளம் எனும் தீகவாபியைத் தலைநகராகக் கொண்டு உருகுணை இராச்சியத்தை ஆட்சி செய்த சிங்கள மன்னர்களின் ஆளுகையின் கீழே இருந்து வந்துள்ளது. (மட்டக்களப்புத் தமிழகம் பக். 401)

இதன் பின்பு கலிங்கமாகனின் ஆட்சி (கி.பி. 1215-1259) முடிவுற்றதும், மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போல சிங்கள மன்னர்களின் பிடிக்குள் மட்டக்களப்பு சிக்கும் படியாயிற்று.

இம்மாநிலம் சிங்கள மன்னரின் ஆட்சிக்குட் பட்டிருந்தமையால்தான், போர்த்துக்கல் மன்னன் பிலிப்புவின் கட்டளைக்கிணங்க கோட்டையில் வாழ்ந்த முஸ்லிம் மக்களில் ஏறக்குறைய நாலாயிரம் பேரை கண்டி மன்னன் சேனரத்தால் இம்மண்ணில் (கி.பி. 1626ல்) குடியேற்ற முடிந்தது. (கொட்றிங்கரனின் இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.106) மட்டக்களப்புத் தமிழகம் சிங்கள மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த போதும் குறுநில மன்னர் சிலர் இந்த மண்ணில் சுதந்திரமாக ஆட்சி செலுத்தியதாக அறிய முடிகின்றது.

இத்தகைய சுதந்திர அரசுகள் கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலகட்டத்தில் இலங்கை முழுவதும் பரந்து காணப்பட்டன என்பார் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் செ. கிருஷ்ணராசா அவர்கள். (இலங்கை வரலாறு பாகம் 1, பக்கம் - 122)

மட்டக்களப்பு மான்மியம் - மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றினை ஓரளவு அறிய உதவும் ஒரு நூல். உண்மைச் சம்பவங்களோடு கற்பனையும் கலந்து உருவாக்கப்பட்ட இந்நூல் விஜயன் காலம் (கி.மு. 541) முதல் டச்சுக்காரர் காலம் (கி.பி. 1793) வரை கிழக்கு இலங்கையில் நடைபெற்ற நிகழ்வுகள் சிலவற்றைச் சுருக்கியும் விரித்தும் சொல்கிறது.

மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் இந் நூலின் கண் உள்ள பல சம்பவங்களையிட்டு நடுநிலை நின்று சிந்திக்கும் ஒருவன் மனத்தில் தோன்றும் நியாயமான சந்தேகம், கேள்விகள், இன்றையத் தலைமுறையினரைத் தமது விருப்பம் போல் எழுதவும், வியாக்கியானம் செய்யவும் இடம் தந்து விட்டன என்பது ஒரு கசப்பான உண்மையே.

மட்டக்களப்பின் பெரும்பாலான ஊர்ப் பெயர்கள் இங்குள்ள மரம், குளம், கேணி, மடு ஆகியவற்றை அடிப்படையாகவும் தனிப்பட்ட மனிதரின் பெயரைக் கொண்டும் விளங்குவன. அத்தகைய பெயர்களில் சில திரிக்கப்பட்டுள்ள மையால் அவற்றின் பக்கம் மட்டுமே தற்போது நமது கவனத்தைத் திருப்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டுகளுக்கு முன்பு மட்டக்களப்புத் தமிழகத்தில் வாழ்ந்த பழங்குடி மக்களின் பெயர்களில் காத்தான், காத்தமுத்து, காத்தவராயன் என்னும் பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் காத்தான் என்னும் பெயரைப் பூண்டு உலகப் பிரசித்தியெய்திய ஒரு கிராமம் (காத்தான்குடி) மட்டக்களப்பு மண்ணில் உண்டு. இதில் உள்ள காத்தான் என்னும் பெயர்ச் சொல்லைப்போல குடி என்னும் சொல்லும் பழமை மிக்கது. அனைத்துத் தமிழ் நூல்களிலும் தொன்மை மிக்கதெனச் சொல்லப்படும் தொல்காப்பியத்திலேயே இச் சொல்லைக் கண்டு நாம் மகிழலாம்.

ஆனால், இந்த மகிழ்ச்சிக்கு முடிவுகட்ட வேண்டுமென்று எண்ணியதாலோ அல்லது வேறு ஏதாவது ஏதுக்களாலோ காத்தான் என்னும் பழந்தமிழ்ப் பெயர்ச் சொல்லை கஹத்தான் எனும் அரபுச் சொல்லாக மாற்றச் சிலர் முற்பட்டுள்ளமை (காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம். பக் -30) நகைப்புக்குரியதன்றி வேறு அன்று.

மேலும் இருவேறு சொற்களுக்கிடையே பொதுவாக உள்ள ஒலி அமைப்பை மட்டும் கருத்தில் கொண்டு சொல்லாய்வில் ஈடுபட்டு ஒரு முடிவுக்கு வருதல் அத்துறையையே மலினப்படுத்தும் ஒரு போக்கு ஆகும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணருதல் அவர்களுக்கும் நல்லது, மொழித் துறைக்கும் நல்லது.

இச்சந்தர்ப்பத்தில் மொழியியலில் மிகுந்த ஞானமும் அனுபவமும் உடைய பேராசிரியர் மு. வரதராசன் அவர்களின் ஆழ்ந்த கருத்துக்கள் சிலவற்றை இங்கே சுட்டிக்காட்டுதல் பெரும்பயன் தருவதாகும்.

மொழிக்கு மொழி ஒலிகளில் உள்ள வேறுபாடுகள் சொற்களிலும் சொற்றொடர்களிலும் உள்ள வேறுபாட்டை விட மிகக் குறைந்த அளவே ஆகும். அடிப்படையான ஒலிகள் ஏறக்குறைய எல்லா மொழிகளிலும் ஒரு தன்மையாகவே உள்ளன. (மொழி வரலாறு - பக். 36)

சொல்லின் திரிபால் பொருளுணர்ச்சி குன்றுமாயின் அல்லது மயங்குமாயின் அத்தகைய திரிபு மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மலைநாடு என்பதை 'மலாடு' எனத் திரிந்து வழங்குவதில் இவ்வுண்மையைக் காணலாம். (மொழிநூல் - பக். 109)

சொற்களின் வடிவம் திரிவதற்கு மனம் காரணம் அன்று, ஒலிக்கும் உறுப்புக்களே காரணம். சொற்களின் பொருள் திரிவதற்கு உறுப்புக்கள் காரணம் அல்ல, மனமே காரணம். (மொழி நூல் பக். 269)

திராவிட மொழிகள் ஒட்டுநிலை மிக்கனவாக இருத்தலால் இருவகை இயல்பு அவற்றிடைக் காண்கின்றோம். ஒன்று - அடிச்சொல் தெளிவாக நிற்றல், மற்றொன்று - அடிச்சொல் சிதையாவாறு நிற்க வேண்டி அதனுடன் சேரும் உறுப்புக்கள் தெளிவாக ஒட்டி நிற்றலால் பலவகைச் சொல்லாய் நீளல். (மொழிநூல் பக். 115)

இறுதியாகத் தரப்பட்ட அறிஞரின் கருத்திற் கேற்ப காத்தான் என்னும் பெயர்ச் சொல்லின் அடிச்சொல் (root) 'கா' தெளிவாக நிற்பதைக் காண்கின்றோம். இது போன்று அடிச் சொல்லோடு சேரவேண்டிய ஏனைய பகுபத உறுப்புக்களும் தெளிவாக இருத்தல் இச் சொல்லை (காத்தான்) கா + த் + த் + ஆன் என்று பிரித்துப் பார்க்கையில் புலனாகும். இவ்விதம் பகுதி, விகுதியைப் பிரித்தறியும் நிலை செமிற்றிக் (SEMITIC) மொழிகளில் இல்லை என்பார் அறிஞர் மு.வ. (மொழி வரலாறு பக் - 248).

காத்தான், கஹத்தான் எனும் தமிழ், அரேபிய (இது செமிற்றிக் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது). சொற்களில் மட்டுமன்றி பேச்சு, **SPEECH**, தாக்கு **ATTACK** அப்பா **PAPA** அம்மா **MAMMA** ஆகிய தமிழ் ஆங்கிலச் சொற்களிலும் ஏறக்குறைய ஒரேவித ஒலி அமைப்பு உண்டு. (டாக்டர் ச. அகத்திய லிங்கத்தின் உலக மொழிகள் - பக்கம் 19) இந்த ஒலி அமைப்புக் காரணமாக மேற்படிச் சொற்கள் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கோ அல்லது ஆங்கிலத்தில் இருந்து தமிழிற்கோ வந்ததென்று ஆய்வறிவுள்ள யாரும் கூறுவார்களா என்ன?

ஒட்டுமொழி பற்றி இன்னுமொரு தமிழ் அறிஞர் டாக்டர். செ. வை. சண்முகம் அவர்களின் கருத்தும், நமது கவனத்தைப் பெரிதும் கவர் கின்றது. அவர் எழுதுகின்றார் தமிழ் போன்ற ஒட்டுநிலை மொழியில் (Agglutinative) தான் பகுதியும் விகுதியும் எளிதாகப் பிரித்துக் காட்ட முடியும். (இலக்கண உருவாக்கம் - பக் - 04)

அறிஞர்களின் மேற்படிக் கருத்துக்களை 'காத்தான்' சொல் ஆய்வில் ஈடுபட்டுள்ளோர் கவனத்தில் எடுத்துக்கொள்வார்களாக.

மட்டக்களப்புத் தமிழகத்தில் உள்ள ஊர்கள் பலவற்றின் பெயர்கள் போன்று, புளியந்தீவு என்னும் பெயரும் காரணத்தை ஒட்டி அமைந்த தாகும். புளிய மரங்கள் நிறைந்த இந்த மண்ணில் புளியடிக்குடா, புளியங்கண்டலடி ஆகிய ஊர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியமரத்தை அடியாகக் கொண்டே தோற்றம் பெற்றமை எந்த விதத்திலும் ஆச்சரியத்திற் குரியதன்று, இந்த மண்ணின் குணமே அதுதான்.

ஆனால், மண்ணின் குணத்தை நன்கு அறிந்தவரும் தமிழ் அறிஞருமான வ. சிவசுப்பிர மணியம்,B.A அவர்கள் 'மட்டக்களப்பு மான்மியத்தில்' (பக்-67) உள்ள கதை ஒன்றை அடிப்படையாக வைத்து புலியமாறன் என்பவனின் பெயரைக் கொண்டே புலியந்தீவு என்றும் பின் அது திரிந்து புளியந்தீவு என ஆனது என்றும் கூறுதல் (மட்டக்களப்பு நாட்டாரியல் பக்-59) தாம் பிறந்த மண்ணின் மரபையும் தன்மையையும் மறந்து விட்டமையையே காட்டி நிற்கும்.

இப்பெயரினைப் போன்றே மட்டக்களப்பில் உள்ள ஏறாவூர் எனும் ஊர் தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட சிவசுப்பிரமணியம் அவர்கள். சங்ககாலத்தைச் சேர்ந்த பத்துப்பாட்டுக்களில் ஒன்றான சிறுபாணாற்றுப்படையை களப்பிரர் காலத்தில் (கி.பி. 3ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6ம் நூற்றாண்டுவரை) தோன்றியதாகக் காட்ட முற்படுதல் (மட்டக்களப்பு நாட்டாரியல் - பக்.27) கால ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டோரை நிச்சயம் வியப்பில் ஆழ்த்தும்.

மட்டக்களப்புத் தமிழகவரலாறு தொடர்பாக இத்தகைய திரிபுகளும் தெளிவின்மையும் இருந்த போதும் பெருங்கற்காலத்தில் (கி.மு. 1000 - கி.மு. 500 வரை) மட்டக்களப்பிற்கு வடக்கே நாற்பத்தைந்து மைல் தூரத்தில் உள்ள கதிரவெளி என்னும் கிராமத்தில் தமிழ் நாட்டிற்கிணையான நாகரிக மேம்பாட்டோடு எங்கள் முன்னோர் வாழ்ந்திருக்கிறார்கள் என்னும் உண்மையை அங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்லாய்வுப் பொருட்கள் (கி.மு. 2ம் நூற்றாண்டு) உறுதிப்படுத்தியுள்ளமை மட்டக்களப்புத் தமிழகத்து வரலாற்றின் இருண்ட பக்கங்களில் பாய்ச்சப்பட்ட பேரொளி என்று நாம் பெருமிதம் கொள்ளலாம்.

**வாகரைவாணன்**

(நூல்: பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்புத் தமிழ்)

# படித்ததில் பிடித்தது....



புரட்சி ஏற்படுத்தும் **MP3** பற்றி அறிந்த விடயங்களை உங்களுடன் பகர்கின்றேன். **Moving pictures Expert Group (MPEG)** என்ற நீண்ட வடிவத்தை சுருக்கி இதன் கண்டு பிடிப்பாளராகிய ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த **Dr. Karlheniz Brandanburg** (கால்ஹெனிஸ் பிரன்டன்பேக்) என்பவரின் மூன்றாவது கண்டுபிடிப்பு என்பதனால் இதனை **MP3** என்று அழைக் கின்றனர். இதன் தற்போதைய கண்டுபிடிப்பான **MP4**வும் அறிமுகத்தில் உள்ளது. **Audio CD, Video CD** போன்றவைகளில் பதிவு செய்யக்கூடிய ஒலிப்பதிவுகள் போன்று ஏறக்குறைய பத்து, பன்னிரண்டு மடங்கு அதிகமாகப் பதியக் கூடியது இதன் சிறப்பம்சமாகும். இவ்வாறு அதிக பதிவுகளை மேற்கொள்வதற்கான காரணத்தை ஆராய் வோமானால், முதலில் மனிதர்களுடைய கேள் தகைமைகளை அறிந்திருக்க வேண்டியது முக்கியமாகும். பொதுவாக மனிதர்கள் 20-20000 MHZ ஒலி அலைகளைத்தான் கேட்கின்றனர். **20MHZ** ஒலிகளுக்குக் குறைவாகவோ அல்லது 20000MHZ ஒலி அலைகளுக்கு அதிகமாகவோ மனிதர்களால் கேட்க முடியாது. **CD**க்களில் மனிதர்களால் கேட்கமுடியாத ஒலிகளும் பதிவு செய்யப்படுவதனால் பதிவு செய்யக்கூடிய அளவு குறைவடைகின்றது. மாறாக **MP3**ல் தேவையில்லாத அனைத்து ஒலிகளும் கட்டுப்படுத்தப் படுவதனால் அதிகமான பதிவுகளை மேற்கொள்ள முடிகின்றது. நவீன உலகிற்கு MP3யின் வரவு ஒரு வரப்பிரசாதமே.


(ஆதாரம். ஜே. சஞ்சிகை)

**-ஜொனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10வது தென்னாசிய விளையாட்டின்



# இறுதி அலசல்

நிகழ்வுகள் எங்கெல்லாம் நடை பெறுகின்றனவோ அங்கெல் லாம் பல்வேறு சர்ச்சைகளும் இடம் பெற்றுவருவதைப் பண்டைக் காலத்தில் இருந்தே அவதானிக் கலாம். அந்த வகையில் தென் னாசிய விளையாட்டுக்களிலும் பல சர்ச்சைகள் நிகழ்ந்திருக்கின்றன. அவைகள் பற்றி இப்பகுதியில் பார்ப்போம்.

இலங்கையில் வளர்ந்து வரும் குறுந்தூர ஓட்ட வீராங் கனையான சானி மதுராங்கனி ஊக்க மருந்து பாவித்த சர்ச்சை யில் சிக்கியுள்ளார். குறுந்தூர ஓட்டம் என்றாலே உலக அரங்கில் மறக்கமுடியாதவராக விளங்கு கிறார், அமெரிக்காவின் ஓட்ட வீரங்கனையான மேரியன் ஜோன்ஸ். இவர் கூட தற்போது ஊக்க மருந்து பாவித்ததாக சர்ச்சையில் மாட்டிக் கொண்டிருப்பதை அவ தானிக்கையில் விளையாட்டு வீரார்கள் வெற்றி பெறுவதற்காக தங்கள் மீதும் தங்கள் சக்தி மீதும் நம்பிக்கை வைத்திருப்பதை விட மருந்துகளின் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றனர் என்று கூடக் கூறலாம். இவ்வளவு காலமும் இலங்கையில் சுசந்திக்கா ஜயசிங்க வைப் பார்த்து அலுத்துப் போன வர்களுக்கு சானி மதுராங்கனியின் வரவும், அவரது வளர்ச்சியும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கும், இருந்தாலும் அவர்மீது வந்தபுகார் அவருடைய புகழை மங்கச் செய்வதற்குக் காரணமாய் அமைந்து விட்டது. இவ்விளையாட்டுக்களில் அவர்மீது மட்டும் குற்றம் சுமத்தப் படவில்லை, மாறாக பல பாகிஸ் தானிய குத்துச் சண்டை வீரர்களும் வேறு சில ஓட்ட வீரர்களும், வீராங்கனைகளும்இதில் அடங்குவர். இந்தக் குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் விளையாட்டுப் போட்டியாளர்கள் பெற்ற பதக் கங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று தென்னாசிய விளையாட்டுச் சம்மேளனம் தெரிவித்திருக்கின்றது.


வழமையான நடவடிக்கை என்ன வென்றால் அவர்களின் பதக்கங்கள் பறிமுதல் செய்யப் பட்டு அவர்களுக்கு அடுத்த நிலையில் வெற்றியீட்டியவர்களுக்கு வழங்கப்படும். இறுதியாகக் கிடை த்த தகவல்களின்படி சானி மது ராங்கனி ஊக்க மருந்து பாவித் தமை விசாரணையில் உறுதிப் படுத்தப்பட்டமையால் அவரது பதக்கங்கள் பறிமுதல் செய்யப் பட்டதோடு இரண்டு ஆண்டுகள் போட்டிகளில் பங்கு கொள்ளத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாசிய நாடுகளில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கும் விளை யாட்டாகிய கிறிக்கெட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஊக்கமருந்துப் பாவனையும் அனைவரது கவ னத்தையும் ஈர்த்துக் கொண்டி ருக்கின்றது. பொதுவாக கிறிக் கெட்டில் சூதாட்டம் நடைபெறுவது வழமை. ஆனால் இம்முறை மிக முக்கியமான பாகிஸ்தானிய வேகப்பந்து வீச்சாளர்களாகிய சொகைப் அக்தரும், முகம்மட் அசிப்பும் இந்தச் சர்ச்சையில் சிக்கி ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணத்தில் பங்கு பெற அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அடுத்த இதழில் பல சுவாரசியங்கள் மிக்க ஐ.சி.சி மினி உலகக் கிண்ண கிறிக்கெட் போட்டிகள் பற்றி உங்களுக்கு அறியத்தருகின்றேன்.

**– ஜொனா –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# JERRAD MOTORS

Prop : Jerrad Outschoorn

No. 521 A, Trinco Road,
Batticaloa, Sri Lanka.

**AUTHORIZED**
**BAJAJ GENUINE SPARE PARTS**
**& SERVICE DEALER**

Fax : 065 - 2225428
T.P : 0602650265

# ANGELO MOTORS


*Main Road, Valaichchenai*

David Pieris Motor Company Ltd,

**Spare Parts, Service and Sales Dealer.**

AUTHORIZED DEALER

Fax : 065 - 2257571
T.P : 0602650890



D.P.M.C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30 - 12 - 2006

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 52

**(விடுதலைப் பயணம் 32: 28,33:3)**
**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே பாளையத்துக்கு வெளியே கூடாரத்தைத் தூக்கிச் செல்வதும் பாளையத்திற்கு வெகுதூரத்தில் கூடாரம் அடிப்பதும் வழக்கம், அதற்கு அவர் .................................................. என்று பெயரிட்டார். ஆண்டவரைத்தேடும் யாவரும் பாளையத்துக்கு வெளியேயுள்ள சந்திப்புக் கூடாரத்திற்குச் செல்வர். மோசே கூடாரத்திற்குச் செல்லும் போதெல்லாம் மக்கள் அனைவரும் அவரவர் கூடார .................................................. எழுந்து எழுந்து நின்று கொண்டு, அவர் கூடாரத்தில் நுழையும் வரை அவரைப் பார்த்துக் கொண்டேயிருப்பர். மோசே கூடாரத்தில் நுழைந்ததும் .................................................. இறங்கிவந்து கூடார நுழைவாயிலில் நின்று கொள்ளும். அப்போது கடவுள் மோசேயிடம் பேசுவார். கூடார நுழைவாயிலில் மேகத்தூண் நின்று கொண்டிருப்பதை மக்கள் அனைவரும் காண்பர். அப்போது அவரவர் .................................................. நுழைவாயிலில் நின்று கொண்டே மக்கள் அனைவரும் வணங்கித் தொழுவர். ஒருவன் தன் நண்பனிடம் பேசுவது போலவே ஆண்டவரும் முகமுகமாய் .................................................. பேசுவார். பின்னர், மோசே பாளையத்துக்குத் திரும்புவார். இளைஞனும் நூனின் மகனுமான யோசுவா என்ற அவருடைய உதவியாளர் கூடாரத்தை விட்டகலாமல் இருப்பார். மோசே ஆண்டவரிடம் "இம்மக்களை .................................................. என்று நீரே என்னிடம் கூறியிருந்தும் என்னொடு அனுப்பப்போகும் ஆளைப் பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை. 'பெயர் உட்பட உன்னை எனக்குத் தெரியும்' என்றும், 'நீ என் .................................................. தயை பெற்றுள்ளாய்' என்றும் கூறியுள்ளீர். இப்போதும் உம்பார்வையில் நான் தயை பெற்றிருந்தால், உம் வழிகளை எனக்குக் காட்டியருளும், உம்மை இதனால் .................................................. உம் பார்வையிலும் தொடர்ந்து தயை பெறுவேன். மேலும், இந்த இனம் உம் மக்கள் என்பதையும் கருத்தில் கொள்ளும் என்றார். அதற்கு ஆண்டவர், 'எனது .................................................. உன்னோடு செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்'' என்று கூற, மோசே அவரிடம்", உமது பிரசன்னம் கூட வரவில்லையெனில் எங்களை இங்கிருந்து போகச் செய்யாதீர். நானும் .................................................. உம் பார்வையில் தயை பெற்றுள்ளோம் என்பதை எப்படி அறிவோம்? நீர் எங்களோடு வருவதாலும் நானும் உம் மக்களும் மண்ணுலகில் உள்ள அனைத்து மக்களினங்களினின்றும் வேறுபட்டு நிற்பதாலும் அன்றோ?' என்றார்.

**விடைகள்: அறிந்துகொள்வேன், உம்மக்களும், மோசேயிடம், பிரசன்னம், சந்திப்புக்கூடாரம், மேகத்தூண், நுழைவாயிலில், கூடார, பார்வையில், நடத்திச்செல்.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம்- 52

(பொருத்தமான சொற்களின் கீழக் கோடிடுக)

1. அண்மையில் நடந்து முடிந்த *I.C.C* மினி உலகக்கிண்ண கிரிக்கற் போட்டியில் வென்ற நாடு
   (இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்ரேலியா)
2. கண்டமாகவும் நாடாகவும் இருப்பது
   (ஐக்கியஅமெரிக்கா, ரஷ்யா, அவுஸ்திரேலியா)
3. உலகில் வேகமாக பயணிக்கக் கூடியது
   (விமானம், செயற்க்கைக்கோள், எலெக்ட்ரான்)
4. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது
   (இழுக்கு, அழகு, இனிது)
5. முதல் சோதனைக் குழாய்க் குழந்தை உருவாக்கப்பட்ட ஆண்டு
   (*1975, 1978,1980*)
6. "தேன்மொழி" என்பது
   (பண்புத்தொகை, அன்மொழித்தொகை, உவமைத்தொகை)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 52**

**தொண்டன்**

**அ.பெ. எண் 44**

**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 50A விடைகள்

எகிப்து, தெய்வங்களை, பொற்காதணிகளை, உருக்கி, இஸ்ரயேல்,
எரிபலிகள், மக்கள், அழித்தொழிக்க, தீங்கிழைக்கும், வாக்களித்த

## அறிவை வளர்ப்போம் - 50A விடைகள்

1. இந்தியா
2. இராமாயணம்
3. ஸ்ரீமாவோபண்டரநாயக்கா
4. மேற்கத்தேய இசை
5. ரஷ்யா
6. இரட்டைக்கிளவி

**இரண்டு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதிப் பரிசு பெறுவோர்**

- S. தம்பிமுத்து மேரிமாலா
எம்மாவுஸ் சிறுவர் இல்லம்
விவேகானந்தா வீதி (சாகாம வீதி)
அக்கரைப்பற்று-08

- S.பிரஷிக்கா
525/1, பாலகொல்ல,
கெங்கல்ல,
கண்டி.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் விடை அளித்துப் பரிசு பெறுவோர்.**

- J. ரோய்பெலீசியன்
இல-358/1, வீரநகர் N.C வீதி
திருகோணமலை.

- S. ஜசி
37/1, றொசாயிறோலேன்
தாண்டவன்வெளி,
மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

- லோகநாதன் அன்றுஷியாம்
'சோபனம்'
தேவாலய வீதி
திருக்கோவில்-2

- சருன் யோகேந்திரராஜா
64/19 விவேகாநந்தா ஒழுங்கை,
வைத்தியசாலை வீதி,
மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registeredasa News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## டிசம்பர் ~ 2006

**கத்தோலிக்க நற்சிந்தனை - நேரம் காலை 6.10 மணி.**

நாள் 9, 10, 11, 12 - A.S. யோகராஜா அவர்கள்

13, 14, 15 - அருள் சகோ. செல்வநாயகம் அவர்கள்

23, 24, 25, 26 - பெஸ்லீயோ வாஸ் அவர்கள்

27, 28, 29 - J. டேவிட் அவர்கள்

**சிறுவர் உலகம் - நேரம் மாலை 6.45 மணி**

நாள்:- 05, 19 - விவிலியக்கதை வினா விடைப்போட்டி

நடத்துபவர்: பாரதிப்பிரியா

**புதிய உலகம் - நேரம் மாலை 6.30 மணி**

நாள்: 03 ,07, 31 - சஞ்சிகை மலர்...

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொடர்பு. சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road , Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org